# மாலை தீப்பொறி

MALAE THEEPORI

2026 ஜூலை 16-31 தொகுதி 24 இதழ் 23 விலை ரூ.10 ஆண்டு சந்தா ரூ.200

# தமிழ்நாட்டில் இடதுசாரி அரசியலின் எதிர்காலம்



# இடது மக்கள் இயக்கம் உதயம்!

இகக(மாலெ), இகக, இகக(மா) ஆகிய மூன்று இடதுசாரிக் கட்சிகளின் ஒருங்கிணைப்புக் குழு கடந்த ஜூன் 17, அதன் தொடர்ச்சியாக இடதுசாரி வர்க்க, வெகுமக்கள் அமைப்புகளின் கூட்டுக் கூட்டம் AITUC தேசிய செயலாளர் தோழர். T. M மூர்த்தி தலைமையில் 10.07.2026 அன்று சென்னையில் நடைபெற்றது.

கூட்டத்தில் AITUC, CITU, AICCTU, AIKM, BKMU, AISA, NFIW, SIKM, ASM, AIPWA, AIDWA, TNUEF, AIAWA, TNOVI, DYFI, SFI, AIKS, AIKS, AISF, AIYF, AIARLA, RYA, நீதிக்கான மக்கள் இயக்கம் ஆகிய அமைப்புகளின் மாநில நிர்வாகிகள் பங்கேற்றனர்.

இந்தக் கூட்டத்தின் நோக்கமாக, தமிழ்நாடு அளவிலும் அகில இந்திய அளவிலும் அரசியல், ஜனநாயக, உரிமைகளை நிலை நாட்டவும், தொழிலாளர், விவசாயி, விவசாயத் தொழிலாளர், இளைஞர், பெண்கள், மாணவர், ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமை, நல்வாழ்வு, சிறுபான்மை மக்களின் பாதுகாப்பு, அடிப்படை உரிமைகள், வாழ்வாதாரத்தை பாதுகாக்கும் போராட்டங்களை முன்னெடுப்பதுமாகும். ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டங்களை நடத்துவது. பாட்டாளி வர்க்க நலனை உயர்த்திப் பிடிக்கும். அதற்கேற்ப கீழ்க்கண்ட அடிப்படையான கோரிக்கைகளில் ஒன்றிய, மாநில அரசுகள் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளை முன்வைத்து இயக்கங்கள் நடத்த திட்டமிடப்பட்டது .

1.இந்திய அரசமைப்புச் சட்டத்தைப் பாதுகாப்போம்.

2.ஜனநாயக உரிமைகளை, ஜனநாயக நிறுவனங்களைப் பாதுகாப்போம்.

3. நிலம், குடிமனை பட்டாக்களுக்கான போராட்டங்களை வலுப்படுத்துவோம்.

4.ஒன்றிய பாஜக அரசு அமல்படுத்தி வரும் நான்கு சட்டத் தொகுப்புகளை திரும்பப் பெற வலியுறுத்தி போராடுவது,

5. அமெரிக்கா, அய்ரோப்பிய யூனியன், நியூசிலாந்து உள்ளிட்ட நாடுகளுடன் கட்டற்ற வர்த்தகம், விதைச் சட்டம், மின்சார திருத்தச் சட்டம் போன்ற விவசாயிகளின் வாழ்வாதாரத்தைப் பறிக்கும் நடவடிக்கைகளை கைவிட வலியுறுத்துவது,

6. 100 நாள் வேலைச் சட்டத்தை நீர்த்துப்போக செய்யும் வகையில் முன்மொழிந்துள்ள வி.பி–கிராம்–ஜி சட்ட அமலாக்கத்தை கைவிட்டு பழைய சட்டத்தை அமலாக்க வலியுறுத்துவது,

7.நாடு முழுவதும் பெருகிவரும் வேலையின்மை, காண்ட்ராக்ட், பயிற்சி என்ற பெயரிலான உழைப்புச் சுரண்டல் நடவடிக்கைகளை எதிர்த்துப் போராடுவது

8. 33% பெண்கள் இடஒதுக்கீட்டை வலியுறுத்தி, பெண்கள், குழந்தைகள் மீதான வன்முறையை தடுக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்வது,

8. கல்வி வணிகமயத்தை எதிர்ப்பது, நீட் மற்றும் தேசிய தேர்வு முகமை போன்ற ஒன்றிய பாஜக அரசு அமல்படுத்தும் முறைகள் கைவிட்டு, பழைய நடைமுறையை அமலாக்கப் போராடுவது, மாணவர் பேரவைத் தேர்தல் நடத்த வலியுறுத்துவது,

9. சமூக ஒடுக்குமுறை, ஆணவப் படுகொலை, சிறுபான்மை மக்களுக்கு எதிரான வெறுப்பு அரசியல் ஆகிய சமூக சவால்களுக்கு எதிரான நடவடிக்கை எடுக்கப் போராடுவது,

10. பழங்குடி மக்களின் உரிமைகளைப் பாதுகாக்க வலியுறுத்துவது,

11. மருத்துவம், பொது சுகாதாரம் ஆகியவற்றை வணிகமயமாக்குவதை எதிர்த்தும், மருத்துவத்தை அனைவருக்கும் அரசு உறுதி செய்ய வலியுறுத்தியும் போராடுவது;

இந்தக் கோரிக்கைகளை முன்வைத்து தொடர்ந்து கருத்து பரப்புரை, போராட்டங்களை முன்னெடுக்கவும். மாநில உரிமைகள் பாதுகாப்பு, தாய் மொழி சார்ந்த உரிமைகள் மற்றும் பண்பாட்டு ஒடுக்கு முறைக்கு எதிராகவும் போராட்டங்களை முன்னெடுக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

•இது குறித்து திட்டமிட்டு தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்ள அனைத்து மட்டத்திலும் தமிழ்நாடு அளவில் எடுத்துச் செல்ல, மாவட்ட அளவில் கூட்டத்தை உடனடியாக நடத்தி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு அமைப்பது. மாவட்ட ஏஐடியூசி, சிஐடியு, ஏஐசிசிடியூ செயலாளர்கள் கூட்டாக இந்தக் கூட்டத்திற்கு அழைப்பு விடுத்து ஏற்பாடுகளை செய்வதென்றும் முடிவானது.

**•ஆகஸ்ட் 25 அன்று மாவட்ட அளவில் மேலே குறிப்பிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி துவக்க கட்ட போராட்டம் நடத்துவது.**

•அடுத்த கட்டமாக மாநில அளவில் ஒரு பெருந்திரள் போராட்ட நடவடிக்கையில் ஈடுபடுவது.

•மேற்படி பணிகளை ஒருங்கிணைக்க கூடிய வகையில், அமைப்புகளின் தலைவர் மற்றும் செயலாளர் ஆகியோரைக் கொண்ட கூட்டமைப்பு மற்றும் அதற்கான வாட்ஸ் ஆப் குழுவை உருவாக்குவது.

•இந்தக் கூட்டமைப்பு “**இடது மக்கள் இயக்கம்**” என்ற பெயரில் செயல்படும்.

மூன்று இடதுசாரி அமைப்புகளின் சார்பில் தோழர்கள் ம.இராதாகிருஷ்ணன், எஸ்.கண்ணன், பாலசுந்தரம் ஆகியோர் ஒருங்கிணைப்பு பணியினை செய்வதென்றும் ஒருமனதாக முடிவானது.

மாலெ தீப்பொறி

**இந்திய கம்யூனிஸ்ட் கட்சி**
**(மார்க்சிஸ்ட் – லெனினிஸ்ட்)**

**தமிழ்நாடு மாநிலக் குழுவின்**
**அரசியல் ஏடு**

இருவார இதழ்
*2026 ஜுலை 16-31*
*தொகுதி 24 இதழ் 23*

முதன்மை ஆசிரியர்
*சங்கர்.வீ*

ஆசிரியர்
ஜி.ரமேஷ்

ஆசிரியர் குழு
பழ.ஆசைத்தம்பி
பாலசுந்தரம்
அ.சந்திரமோகன்
கே.ஜி.தேசிகன்

அட்டை வடிவமைப்பு
*பாட்டாளி*

மேலாளர்
சொ. இரணியப்பன்

1/10, 11ஆவது தெரு,
கருணாநிதி நகர்,
அயனாவரம், சென்னை - 23

*நிர்வாக அலுவலகம்*
3/254 பி, ஜீவா தெரு,
வண்டலூர்
சென்னை - 600048
தொலைபேசி: 9443507067
9840340741

www.tamilnadu.cpiml.net
malaetheepori@gmail.com
cpimlthamilnadu.blogspot.com

# முன்னும் பின்னும்

மாற்றுத் திறனாளி இளைஞரான சபரி வர்மன், தான் நடத்தும் சிறு கடையில் குட்கா வைத்திருந்தார் என்று கைது செய்யப்பட்டு, அநியாயமாக சாகடிக்கப்பட்டுள்ளார். இயற்கை மரணம் என்றார்கள். உடற்கூராய்வில் அவர் உடலில் 19 இடங்களில் காயங்கள் என்றவுடன் கைது படலத்தை ஆரம்பித்தார்கள். சிறைக்குள் தகராறு செய்ததால் சிறையிலிருந்த மற்ற கைதிகளால் தாக்கப்பட்டதால் இறந்து போய்விட்டார் என்று முதல்வர் விஜய் கையிலுள்ள காவல்துறை கதை சொல்கிறது. முதலில் மூன்று வார்டன்கள் தற்காலிகப் பணி நீக்கம் செய்யப்பட்டார்கள். பின்னர், சிறைக் கைதிகள் எட்டு பேர் கைது செய்யப்பட்டுள்ளார்கள். சபரி வர்மனின் மனைவி தன் கணவரின் கொலைக்கு நீதி வேண்டும் என்கிறார். இரண்டு அமைச்சர்கள் கொடுத்த நிதியை வாங்க மறுத்துவிட்டார். கடந்த ஆட்சியின்போது அஜித்குமார் அடித்துக் கொல்லப்பட்டபோது, சாரி சொன்னா போதுமா சி.எம் சார். பதவி விலகுங்கள் சி.எம். சார் என்றார் இன்றைய "சி.எம் சார்" விஜய். இதுவரை முதல்வர் ஒரு வார்த்தைகூட பேசவில்லை.

ஆட்சிக்கு வருவதற்கு முன் பாலியல் குற்றங்களுக்கு அரசும் முதல்வரும் பொறுப்பேற்க வேண்டும் என்றார் விஜய். ஆனால் ஜோசப் விஜய் ஆட்சியில்,"இது சட்டம் ஒழுங்கு சம்பந்தப்பட்டதல்ல, சமூக ஒழுங்கும் தனிமனித ஒழுக்கமும் சம்பந்தப்பட்டது என்கிறார். முந்தைய ஆட்சியில் நடந்தால் அது ஊழல். தன்னுடைய ஆட்சியில் அது சிறு தவறு, அவ்வளவுதான். யாரும் லஞ்சம் கேட்டால் கொடுக்காதீர்கள், இது எங்கள் விஜய் ஆட்சி என்று சொல்லுங்கள் என்று கர்ஜித்தார் கரூரில். ஆனால், யாரும் லஞ்சம் கேட்டால் சும்மா விடமாட்டேன் என்று சொல்லவில்லை. அதனால்தானோ என்னவோ, பழனி மலையடிவாரத்தில் 100 கோடி ரூபாய் நிலத்தை வெறும் 2 கோடி ரூபாய்க்கு பத்திரப் பதிவு செய்து கொடுத்துள்ளார்கள். ஆம், தவறு நடந்துள்ளது என்கிறார்கள் அமைச்சர்கள். அது ஊழல் கிடையாதாம். அந்த நிலத்தை பதிவு செய்யக் கூடாது என்று 15.09.2025, 16.11.2025, 25.12.2025 ஆகிய தேதிகளில் தங்கள் அரசு கடிதம் எழுதியுள்ளது என்று அசராமல் அறிவிக்கிறார் அறநிலையத்துறை அமைச்சர். இவர்கள் ஆட்சிக்கு வந்ததே 10.05.2026ல்தான். 'நண்பன்' திரைப்படத்தில் விஜய் நடித்த 'கொசக்சி பசபுகழ்' கதாபாத்திரத்தின் உண்மை நபரான 'சோனம் வாங்சுக்', தற்போது நீட் ஊழலுக்குக் காரணமான மோடி அரசின் கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் பதவி விலகக் கோரி தில்லியில் 20 நாள்களுக்கும் மேலாக பட்டினிப் போராட்டம் நடத்திக் கொண்டிருக்கிறார். ஆனால், விஜய்யோ, கொள்கை எதிரி! பாஜகவின் ஊழலுக்கு எதிராகவோ, வாங்சுக்கிற்கு ஆதரவாகவோ வாய் திறக்கத் தயாரில்லை. மாறாக, உலகறிந்த 'குட்கா'ஊழல் பேர்வழியான விஜயபாஸ்கர் போன்றவர்களை அதிமுகவிலிருந்து தவெகவில் சேர்த்துக் கொண்டிருக்கிறார். தவெகவைச் சேர்ந்தவர்கள் போதைப் பொருள் விற்று பிடிபட்டால் அவர்களை சொந்த ஜாமீனில் விடும் விஜய்யின் காவல்துறை, சபரி வர்மன் போன்றவர்களை அடித்தே கொல்கிறது.

தவெக அரசு பதவியேற்றவுடன் அரசுக்கு எதிராகப் பேசுகிறது என்று சொல்லி சில சமூக வலைத் தளங்களை தடை செய்து உத்தரவிட்டது. அந்த உத்தரவு நீதிமன்றத்தால் நீக்கப்பட்டது என்றாலும், தவெக பற்றி விமர்சனம் செய்தார் என்பதற்காக ஊடகவியலாளர் விஜயனை விசாரணை என்ற பெயரில் அழைத்து கைது செய்து, அவருடைய செல்பேசியைப் பறித்து வைத்துக் கொண்டு அராஜகமாக, அத்துமீறலில் ஈடுபட்டு வருகிறது முதல்வர் விஜயின் கீழுள்ள காவல்துறை. சபரி வர்மனின் காவல் கொட்டடிக் கொலையும் மனித உரிமைக்கு எதிராக, கருத்துச் சுதந்திரத்திற்கு எதிராக ஊடகவியலாளர் விஜயன் மீது நடத்தப்படும் தவெக அரசின் காவல்துறையின் அத்துமீறலும் வன்மையாகக் கண்டிக்கத் தக்கது. எதையெல்லாம் திமுக அரசின் குற்றம் எனச் சொல்லி, 'மாற்றம்' வேண்டுமெனக் கூறி ஆட்சியைக் கைப்பற்றினாரோ அதே மக்கள் விரோதச் செயல்கள் அதிவேகமாக ஆட்டம் போட்டுக் கொண்டிருக்கின்றன விஜய் ஆட்சியில். பெண்களுக்கு, அரசு ஊழியர்களுக்கு, இளைஞர்களுக்கு அளித்த தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றுவதில் காட்டும் அக்கறையைவிட, ஆட்சியைத் தக்க வைக்க 'குதிரை பேரம்', ஆட்சியை விமர்ச்சித்தால் 'அடக்குமுறை', தனியார்மயக் கொள்கை அமலாக்கம் என்றுதான் தவெக அரசு முனைப்பாக உள்ளது. 'நலம் டி.என்.' என ஆரம்பித்து, அரசு மருத்துவமனைகள் மேம்பாட்டிற்காக மக்களிடம் நிதி கேட்கிறது தவெக அரசு. பல கோடிகள் சம்பாதித்தவர் கொடுக்கமாட்டாராம். இது அரசின் பொறுப்பைத் தட்டிக் கழித்து அனைத்தையும் தனியார் மயமாக்குவதற்கான திட்டம். தேர்தலுக்குமுன், தேர்தலில் மக்களிடத்தில் இருந்த மாற்றத்திற்கான வேட்கையை, சாதகமாகப் பயன்படுத்திக் கொண்ட தவெக, ஆட்சிக்கு வந்ததும் ஓரிரு மாதங்களிலேயே உண்மை முகத்தை காட்டத் துவங்கிவிட்டது. ஆனால், மக்கள் பார்த்துக் கொண்டிருக்க மாட்டார்கள். போராடத்துவங்கி விட்டார்கள். "மாற்றத்தை" கொண்டுவரும் வரை ஓயமாட்டார்கள்.

# அயோத்தி காணிக்கைத் திருட்டு மோசடி

அயோத்தி ராமர் கோயில் அறக்கட்டளையைச் சுற்றி வெளிப்பட்டு வரும் மோசடி, ஒவ்வொரு நாளும் வளர்ந்து வருகிறது. மோடி ஆட்சிக் காலத்தில் நடந்த பல மோசடிகளைப் போல் இந்த மோசடி இல்லை. இந்த மோசடி, மோடி அரசாங்கத்தால் மறுக்கவும் முடியாது; மோடியின் 'வாலாட்டும்' ஊடகத்தால் மறைக்கவும் முடியாத ஒரு மோசடியாகும். சிறீ ராம ஜன்மபூமி புனிதத் தல அறக்கட்டளையை நேரடியாக பாதித்தது போலவே, அதை நியமித்த மோடி அரசாங்கத்தையும் இந்த மோசடி நேரடியாகப் பாதிக்கிறது. ஆர்எஸ்எஸ், விஹெச்பி இரு அமைப்புகளும் இந்த மோசடி விவகாரத்தில் நேரடியாக தொடர்பு கொண்டுள்ளன. மேலும் இந்த மோசடியையும் கோடிக்கணக்கான இந்து பக்தர்களின் நம்பிக்கை அதிர்ந்துபோனதன் தாக்கத்தையும் இந்த இரு அமைப்புகளுமே அதிகாரப்பூர்வமாக ஒப்புக்கொள்ள வேண்டிய கட்டாயத்திற்கு ஆளாகியுள்ளன. அயோத்தியின் உள்ளூர் பத்திரிகையாளர்களும், வழக்கறிஞர்களும் இந்த மோசடியின் முழுமையான அம்பலப்படுத்தலுக்கும் நீதிக்காகவும் போராட உறுதிபூண்டுள்ளதும் இந்த மோசடியில் தான்.

கடந்த நாற்பதாண்டுகளாக, சங்கிப் படையணியின் மூர்க்கத்தனமான அணிதிரட்டல் உத்தியின் மய்யமாக அயோத்தி இருந்து வந்துள்ளது. இந்திய அரசமைப்புச் சட்ட பார்வையையும் சட்டத்தினுடைய ஆட்சியின் கட்டமைப்பையும் வெளிப்படையாக மீறி சங்கிப் படையால் 1992 டிசம்பர் 6 அன்று பாபர் மசூதி இடிக்கப்பட்டதுடன் இந்த இயக்கத்தின் முதல் கட்டம் முடிவடைந்தது. அடுத்த இருபத்தி ஏழு ஆண்டுகளில், நிர்வாகம், நீதித்துறை, மேலோங்கிய ஊடகங்கள் அல்லது பொது சிவில் சமூகம் உள்ளிட்ட இந்திய அரசும் சமூகமும் சங்கிப் படையணி அவற்றை சிதைக்கும் நடவடிக்கையை மேற்கொள்ளத் துணிச்சலூட்டிய அடிப்படை ஊசலாட்டத்தையும் பலவீனங்களையும் ஆரம்பத்திலிருந்தே தொடர்ந்து வெளிப்படுத்தின.

மோடி காலகட்டத்தின் வருகையும் நிர்வாகத்திற்கும் நீதித்துறைக்கும் இடையிலான அதிகரித்த சங்கமிப்பும் 2019-ஆம் ஆண்டின் விசித்திரமான உச்ச நீதிமன்ற தீர்ப்பின் வரவை துரிதப்படுத்தியது. பாபர் மசூதி இடிக்கப்பட்ட அருவருக்கத்தக்க குற்றச் செயலை அந்தத் தீர்ப்பு கண்டித்தது. ஆனால் அந்த நிலத்தை கோயில் கட்டுமானத்திற்காக ஒப்படைத்து, ராமர் கோயில் கட்டுமானத்தை மேற்பார்வையிடவும் நிர்வகிக்கவும் அறக்கட்டளை ஒன்றை அமைக்க ஒன்றிய அரசாங்கத்திற்கு உத்தரவிட்டது. அப்போதிலிருந்து, இந்திய மக்களுக்குப் பதில் சொல்லத்தக்க, ஒரு பொறுப்பான தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதமர் போலன்றி, பண்டைய இந்தியாவின் 'பூசாரி மன்னர்' போல நரேந்திர மோடி நடந்துகொள்ளத் தொடங்கினார். அயோத்தி, மோடி அரசாங்கத்திற்கு, வட இந்தியாவின் பாரம்பரிய கோயில் நகரம் என்பதை விட, அதிகாரத்தின் மையமாக, மதச் சுற்றுலா மற்றும் வணிக மையமாகவே உள்ளது.

அயோத்தி ராமர் கோயில் திட்டத்தைச் சுற்றி ஊழல் குற்றச்சாட்டுகள் எழுவது இது முதல் முறையல்ல. தற்போதைய காணிக்கை கையாடல் குற்றச்சாட்டுகளுக்கு முன்பாகவும் ராமர் கோயில் கட்டுமான இயக்கத்தின் பல்வேறு கட்டங்களில் தொடர் ஊழல் குற்றச்சாட்டுகள் இருந்துள்ளன. இந்த குற்றச்சாட்டுகளில் பெரும்பாலானவை அயோத்திக்குள்ளிருந்தே வந்தவை; அயோத்தி நில உரிமைப் பிணக்கில் முதன்மை வழக்குத் தரப்பினரில் ஒருவரான நிர்மோகி அகாராவால் முன்வைக்கப்பட்டவை. 1980களின் பிற்பகுதி, 1990களின் முற்பகுதியில், மகந்த் சீதாராம், உலகெங்கிலுமிருந்த பக்தர்களிடமிருந்து சேகரிக்கப்பட்ட 1,400 கோடிக்கும் மேற்பட்ட தொகையை விஹெச்பி மோசடி செய்ததாக குற்றம் சாட்டியிருந்தார். அதனைத் தொடர்ந்து கட்டத்தில் ராமர் சிலாக்கள் அல்லது புனிதப்படுத்தப்பட்ட செங்கற்கள் மோசடியாகப் பயன்படுத்தப்பட்டதாகவும் குற்றச்சாட்டுகள் எழுந்தன. மிகவும் அண்மையில், மதிப்பு அதிகரிக்கப்பட்ட நில பரிமாற்ற ஒப்பந்தங்கள் குறித்து பல அம்பலப்படுத்தல்கள் வந்துள்ளன. அவற்றில் ஒரு வழக்கில், ரூ.2 கோடிக்கு வாங்கப்பட்ட நிலம், கொஞ்ச காலத்திலேயே ரூ.18.5 கோடிக்கு சிறீ ராம ஜன்மபூமி புனிதத் தல அறக்கட்டளைக்கு மாற்றப்பட்டது குறிப்பிடத்தக்கது.

இந்தக் குற்றச்சாட்டுகள் அனைத்தும் சங்க்-பாஜக நிறுவனங்களாலும் அடுத்தடுத்த அரசாங்கங்களாலும் திட்டமிட்ட வகையில் புறக்கணிக்கப்பட்டன. அரசமைப்புச் சட்டத்திற்குப் புறம்பாக ஒரு மசூதியை இடித்தது, மத உணர்வுகளை தேர்தல் ரீதியாக சுரண்டுவது, நிதி முறைகேடு குறித்த குற்றச்சாட்டுகள் இவை எதுவும் கோவில் கட்டப்படும் வரை பெரிதாகக் கருதப்படவில்லை. கோவில் கட்டப்பட்டதிலிருந்து அவைகுறித்த எண்ணங்கள் மாறத் தொடங்கியுள்ளது போலத் தெரிகிறது. கோவிலின் கட்டுமானப் பணிகள் முடிவடைவதற்கு முன்பே, 2024 மக்களவைத் தேர்தலுக்கு முன்னதாக நடத்தப்பட்ட கோவில் திறப்பு விழா, பாஜகவுக்கு எதிர்பார்த்த தேர்தல்

பலன்களை அளிக்கவில்லை. அயோத்தி உட்பட உத்தரப்பிரதேசத்தில் தேசிய ஜனநாயகக் கூட்டணி பெரும்பான்மை மக்களவை தொகுதிகளை இழந்தது. நரேந்திர மோடியும் கூட வாரணாசியில் சர்ச்சைக்குரிய முறையில் கடும்போட்டியில் தப்பிப் பிழைத்தார். இப்போது காணிக்கைக் கையாடல் ஊழல், கோவில் அறக்கட்டளைக்கு மட்டுமல்ல, மொத்த சங்க்-பாஜக நிறுவனத்திற்குமே மிகப்பெரிய தார்மீக நெருக்கடியாக வெடித்துள்ளது.

பாதிப்புகளைக் குறைக்க சங்க்-பாஜக மேற்கொள்ளும் முயற்சியானது, கட்டுப்படுத்தப்பட்ட, எல்லைக்குட்படுத்தப்பட்ட விசாரணை நடத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது போலத் தோன்றுகிறது. அதன்மூலம், முக்கிய நபர்களைப் பாதுகாத்து, குற்றத்தை கீழ்நிலை ஊழியர்கள் மீது திணிக்கிறது. மோசடியில் சந்தேகத்திற்குரிய முக்கிய நபராகக் கருதப்படுபவரும் அறக்கட்டளையின் மிக உயர்ந்த ஆர்எஸ்எஸ் நியமனம் பெற்றவருமான அறக்கட்டளையின் பொதுச் செயலாளர் சம்பத் ராய்க்கு மாற்றாக கிருஷ்ணா மோகன் என்பவரை இப்போது ஆர்எஸ்எஸ் நியமித்துள்ளது. இதற்கிடையில், இந்து ரக்ஷா தள் போன்ற இந்துத்துவ அமைப்புகள், இந்து சமூகத்தினுள் மட்டுமே பணம் கைமாறியுள்ள இந்த இந்து விவகாரத்தில் இந்து அல்லாதவர்கள் தலையிட வேண்டாமென்று கேட்டுக்கொண்டுள்ளனர்! காணிக்கைத் திருட்டு குறித்து புகார் அளிக்கும் எதிர்க்கட்சித் தலைவர்களுக்கு எதிராக காவல்துறை நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று விஷ்வ இந்து பரிஷத்தின் சர்வதேசத் தலைவர் கோருகிறார். மேலும், ஆர்எஸ்எஸ் பொதுச் செயலாளர், 'இந்த விரும்பத்தகாத சம்பவத்தைப் பயன்படுத்தி இந்து தர்மத்திற்கும் சமூகத்திற்கும் களங்கம் ஏற்படுத்த முற்படும் இந்து எதிர்ப்பு, தேச எதிர்ப்பு சக்திகளின் சதிகளை முறியடிக்க' இந்து ஒற்றுமைக்கு அழைப்பு விடுக்கிறார்.

அதானியின் பெருந்தொழில் குழும மோசடி வழக்காகட்டும் உஜ்ஜயினியில் மத்தியப் பிரதேச முதல்வர் மோகன் யாதவின் நிலம் கையகப்படுத்தும் வெறியாகட்டும் அயோத்தி காணிக்கைகளில் திட்டமிட்ட வகையிலான மோசடியாகட்டும் அல்லது பெண்களை ஒடுக்கியவர்களைப் புகழ்வதாகட்டும் - சங்கிப் படையணி எப்போதும் ஊழலுக்கும் ஆணாதிக்க வன்முறைக்கும் ஆதரவாக முன்னணியில் நிற்கிறது. அயோத்தி காணிக்கைத் திருட்டு விவகாரத்தில் ஊழலை அம்பலப்படுத்திய ஆர்எஸ்எஸ்-ஸின் மகிபால் சிங் போன்றவர்கள், 'மர்மமான' முறையில் ஒழித்துக்கட்டப்படாவிட்டாலும் ஓரங்கட்டப்படுகிறார்கள். பாஜக முதல் ராம ஜன்மபூமி புனிதத் தல அறக்கட்டளை வரை, சங்கிகளால் நடத்தப்படும் ஒவ்வொரு நிறுவனத்திடமும் இருக்கும் மாற்ற முடியாத ஆர்எஸ்எஸ் குணம், வெளிப்படைத்தன்மை, பொறுப்பேற்பு முழுமையாக இல்லாமையாகும். ஆர்எஸ்எஸ் தனது சட்டச் சான்றுகளை வழங்குமாறு கர்நாடக உள்துறை அமைச்சர் பிரியங்க் கார்கே கேட்டபோது, ஆர்எஸ்எஸ்-ஸை இந்து மதத்துடன் ஒப்பிட்டு, இந்து மதத்திற்கு எந்தப் பதிவும் தேவையில்லை என்று மோகன் பகவத் வாதிடட்டார். எந்த மதத்திற்கும் பதிவு தேவையில்லை, ஆனால் ஆர்எஸ்எஸ் இந்து மதத்திற்கு சமமானதல்ல.

மதத்தின் பெயரில், நீண்ட காலமாக இந்த நாட்டின் ஒவ்வொரு சட்டத்தையும் இந்திய அரசமைப்பின் ஒவ்வொரு கோட்பாட்டையும் ஆர்எஸ்எஸ் மீறி வருகிறது. ராமர் கோவில் காணிக்கைத் திருட்டு மோசடி வழக்கு, ஆர்எஸ்எஸ்-ஸின் வழக்கமான வெளிப்படைத்தன்மை, சட்டப்பூர்வத்தன்மை, பொறுப்பேற்றல் மீறல்களுக்கு அண்மைய எடுத்துக்காட்டாகும். நீண்ட காலமாக, ஆர்எஸ்எஸ் அதன் ஒளிவுமறைவான இருப்புடன், சட்டவிரோத செயல்பாடுகளுடன் தப்பித்து வந்துள்ளது. (நாடு) விடுதலை பெற்ற சில காலத்திலேயே, மகாத்மா காந்தியின் படுகொலையைத் தொடர்ந்து இந்தியாவின் முதல் உள்துறை அமைச்சர் சர்தார் படேல், தத்தித் தவழும் இந்திய சுதந்திரத்தை ஆபத்திலிருந்து காப்பாற்ற ஆர்எஸ்எஸ்-ஸைத் தடை செய்ய வேண்டிய கட்டாயத்திற்கு ஆளானார். பின்னர், ஆர்எஸ்எஸ் அரசமைப்புச் சட்டத்தை ஏற்றுக் கொள்வதாகவும் கலாச்சார அமைப்பாக செயல்படுவதாகவும் உறுதியளித்து விரைவான தடை நீக்கம் பெற்றது.

மதத்தை அரசியல் ஆயுதமாக பயன்படுத்துகிற, பக்திமிக்க இந்துக்களின் மத உணர்வுகளை வணிக லாபத்திற்காகவும் கொள்ளை லாபத்திற்காகவும் சுரண்டுகிற ஆர்எஸ்எஸ் கலாச்சாரத்தையே இப்போது காண்கிறோம். இந்தப் பெரும் அயோத்தி மோசடி வழக்கு, ஆர்எஸ்எஸ்-ஸை அதன் இடத்தில் அடக்கி வைக்க இந்திய மக்களுக்கு மேலும் ஒரு வாய்ப்பை வழங்குகிறது. ஆர்எஸ்எஸ் மற்றும் மோடி-யோகி இரட்டை என்ஜின் ஆட்சி, மோசடியை மறைக்கும் திட்டத்திலிருந்து தப்பிவிட அனுமதிக்கப்படக்கூடாது. அனைத்து குற்றச்சாட்டுகள் குறித்தும் நம்பகமான விசாரணை, பொறுப்புகளை நிர்ணயித்தல், சம்பத் ராய் உள்ளிட்ட அனைத்து குற்றவாளிகளுக்கும் முன்மாதிரியான தண்டனை, ஆர்எஸ்எஸ் கட்டுப்பாட்டில் உள்ள கோவில் அறக்கட்டளையைக் கலைத்தல் – ஆகியவையே அயோத்தி காண வேண்டிய குறைந்தபட்ச சரிசெய்யும் நடவடிக்கைகளாகும்.

**எம்எல் அப்டேட், தலையங்கம்,**
**07 – 13 ஜூலை 2026**

**தமிழாக்கம்: செந்தில்**

# தமிழ்நாட்டில் இடதுசாரி அரசியலுக்கு உள்ள எதிர்காலம் தொடர்பாக

**சாமானியன்**

**கேள்வி: இந்தியாவில் ஒரு மாநிலத்தில் கூட, இடதுசாரிகளின் ஆட்சியோ அல்லது அவர்கள் பங்கேற்கிற ஆட்சியோ இல்லாத போது, இடதுசாரி அரசியலின் எதிர்காலம் பற்றி பேசுவதற்கு என்ன இருக்கிறது?.**

**பதில்:** மன்னிக்கவும், இடதுசாரி அரசியலை மாநில அரசில் பங்கேற்பு அல்லது தேர்தல் வெற்றி என்பதாக சுருக்கிவிட முடியாது. வங்கத்திலும் திரிபுராவிலும் பல ஆண்டுகளாக இடதுசாரிகள் ஆட்சியில் இல்லை. கேரளத்தில் காங்கிரசும், இடதுசாரிகளும் மாற்றி மாற்றி ஆட்சியில் உள்ளனர். இடதுசாரி நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை சென்ற நாடாளுமன்றத்தில் 5 ஆக இருந்தது, இந்த நாடாளுமன்றத்தில் 8 ஆக இருக்கிறது. சென்ற நாடாளுமன்றத்தில் (2019-2024) இ.க.க.(மா) 3 இடங்களிலும், இ.க.க. 2 இடங்களிலும் வெற்றி பெற்று இருந்தார்கள். இந்த நாடாளுமன்றத்தில் இ.க.க 2 இடங்களிலும், இ.க.க.(மா) 4 இடங்களிலும், இ.க.க.(மாலெ) 2 இடங்களிலும் வெற்றி பெற்றுள்ளனர். இந்த எண்ணிக்கையும் கூட, கடந்த காலத்தோடு ஒப்பிடும் போது, வெகுவாகக் குறைந்துள்ளது என்பது சரிதான். (2004 பொது தேர்தலின் முடிவில் இடதுசாரிகள் ஆக கூடுதலாக, 59 இடங்களை நாடாளுமன்றத்தில் பெற்றிருந்தனர்.)

பாரதிய ஜனதா கட்சிக்கு 1984-லில் 2 நாடாளுமன்ற உறுப்பினர்களும், 1989-ல் 85 உறுப்பினர்களும், 1991-ல் 120 உறுப்பினர்களும், 1996-ல் 161 உறுப்பினர்களுடன் 13 நாட்கள் ஆட்சியும், 1998-ல் 182 உறுப்பினர்களுடன் 13 மாத கால ஆட்சியும், 1999-ல் 182 உறுப்பினர்களுடன் 5 ஆண்டு கால கூட்டணி ஆட்சியும் இருந்தது.

2004-ல் 138 இடங்களிலும், 2009-ல் 116 இடங்களிலும் பாஜக வெற்றி பெற்ற போதும், ஆட்சி அமைக்க முடியவில்லை. 2014-ல் 282 இடங்கள், 2019-ல் 303 இடங்கள் என பாஜக வென்று ஆட்சி அமைத்தது. ஆனால், 2024-ல் 240 இடங்கள் மட்டுமே வென்று, தனிப் பெரும்பான்மை இல்லாமல் நின்றது. தெலுங்கு தேசம் மற்றும் அய்க்கிய ஜனதா தளம் ஆதரவோடு ஆட்சி அமைத்தது. இன்று தடாலடியாய் விரிவடைந்துள்ளது.

இந்தியாவில் இடதுசாரி இயக்கமும், அதிதீவிர வலதுசாரி இயக்கமும் (ஆர்எஸ்எஸ்), நூற்றாண்டைத் தொட்டுவிட்டன. ஒன்று மத்தியிலும், பல்வேறு மாநிலங்களிலும் ஆட்சி புரிகிறது. மற்றொன்று நாடாளுமன்றங்கள், சட்டமன்றங்கள் என்ற அளவில் அவ்வளவு பலமாக இல்லை என்பது காணும்போதே தெரிகிற விசயம் தான்.

ஆனால், வரலாறு நெடுக, சிறிய சக்திகள், பெரிய சக்திகள் ஆவதும், பெரிய சக்திகள் சிறிய சக்திகள் ஆவதும் நடந்துள்ளது. இரண்டு இடங்கள் மட்டுமே இருந்த பாஜக, எப்படி நாடாளும் நிலைக்கு வந்தது என்று பார்க்கும் போது, அவர்கள் சோசலிச சோவியத் முகாம் சரிவுக்குப் பிறகு, முனைப்புடனும், சுதந்திரமாகவும் தமது சொந்த அரசியலை இந்தியாவில் வளர்த்தார்கள். பிற்போக்கு பிளவுவாத அரசியலை, எந்த தயக்கமும் இல்லாமல் முன் வைத்தார்கள். கூட்டணி ஆட்சியில் இருந்த போது, நாங்களே ஆட்சிக்கு ஆக்ஸிலேட்டராகவும், பிரேக்காகவும் இருப்போம் என்றார்கள். மசூதியை இடித்தார்கள், ஜம்மு காஷ்மீரை சிதைத்தார்கள். வெறுப்பு அரசியலை விசிறி விசிறி வளர்த்தார்கள். பாகிஸ்தானுக்கு எதிரான பகை, இஸ்லாமியருக்கு எதிரான வெறுப்பு ஆகியவற்றை மேலும் மேலும் ஊதி வளர்ந்தார்கள். கூட்டாளிகளுடன் உறவாடிக் கெடுத்தார்கள். உறவாடியவர்களை சிதைத்தார்கள். சில நேரங்களில் விழுங்கினார்கள். அவர்கள் இந்தியா தழுவிய தீய சக்தியாக துணிந்து செயல்பட்டு வளர்ந்தார்கள். ஆனால், இடதுசாரி அரசியல் அந்த அளவுக்கு தனித்தும், சுதந்திரமாகவும், காத்திரமாகவும் மக்கள் மத்தியில் சென்றிருந்தால், நிலைமை தலைகீழாக இருந்திருக்கும்.

நாடாளுமன்ற, சட்டமன்ற இடங்களில் இன்றளவில் இடதுசாரிகள் சிறிய சக்திதான். ஆனால், ஜனநாயகம் காப்பதில், அரசியலமைப்புச் சட்ட விழுமியங்களையும் மாண்புகளையும் காப்பதில், மாநிலங்களின் உரிமைகளைக் காப்பதில், தொழிலாளர்கள், விவசாயிகளின் உரிமைகளைக் காப்பதில், ஒடுக்கப்பட்டவர்கள், பெண்கள் சிறுபான்மையினர் பக்கம் நிற்பதில், விடாப்பிடியான விட்டுக்கொடுக்காத நிலைப்பாட்டை நாடெங்கும் இடதுசாரிகள் எடுத்துள்ளனர். இடதுசாரிகள் இந்தியாவின் இந்தி பேசும் மாநிலங்களிலும் இப்போது வெற்றிகரமாகச் செயல்படுகிறார்கள். மாலெ கட்சி, பீகாரில் சென்ற சட்டமன்றத் தேர்தலில் 12 இடங்களைக் கூட, வெல்ல முடிந்தது.

இன்றும் பீகார் மற்றும் ஜார்கண்டில் 4 சட்டமன்ற உறுப்பினர்களையும், 2 நாடாளுமன்ற உறுப்பினர்களையும் வைத்திருக்கிறது.

விவசாயிகளின் போராட்டத்தில், தொழிலாளர்களின் போராட்டத்தில், தலித் மக்களின், பெண்களின், சிறுபான்மையினரின் சமத்துவம் மற்றும் அச்சமற்ற சுதந்திரத்திற்கான போராட்டத்தில், மாணவ இளைஞர்களின் வருங்காலத்திற்கான போராட்டத்தில், இந்தியா என்ற அடையாளம் பன்மைத்துவம் ஆகியவற்றை காக்கும் போராட்டத்தில், இந்தியா எங்கும் இடதுசாரிகளே தொடர்ச்சியாக போராடுகின்றனர்; அவர்கள் பின்னால், மக்கள் போராட்டங்களில் அணிதிரள்வது, 1947 லிருந்து 2026 வரை, எந்த ஆண்டிலும் நின்று போகவில்லை. எந்த ஆட்சிக் காலத்திலும், எந்த மாநிலத்திலும், இடதுசாரிகளின் போராட்டம் என்பது, அரசியலில் ஒரு தொடர் நிகழ்வாகும்.

இந்தியாவிற்கு, தமிழ்நாட்டிற்கு இடதுசாரி அரசியல் தேவை. இடதுசாரிக் கட்சிகளுக்கு மக்கள் ஆதரவு தேவை. மார்க்சியம் பாட்டாளி வர்க்கத்தின் ஆயுதம் என்றும், பாட்டாளி வர்க்கம் மார்க்சியத்தின் ஆயுதம் என்றும், காரல்மார்க்ஸ் சொன்னார். அதே பாணியில் இந்தியாவின் உழைக்கும் மக்களுக்கும், இடதுசாரி அரசியலுக்கும் இடையிலான உறவு வலுப்படுவதும், விரிவடைவதும் நடக்க வேண்டும்.

பிரச்சனையை, இடதுசாரிகளின் சட்ட மன்ற, நாடாளுமன்ற இடங்கள் என்ற அளவிற்கு மட்டும், சுருக்கிவிட முடியாது. ஜனநாயகத்தின் பக்கம் நிற்கிற இடதுசாரிகள், சுதந்திரமான மக்கள் நலன்காக்கும் இடதுசாரி அரசியலை வலுப்படுத்துவதில் மக்கள் திரள் போராட்டங்களை முன்னெடுப்பதில், பலம் பெற வேண்டும் என்பது தான், அடிப்படையான விசயமாக அமைய வேண்டும்.

**கேள்வி: மக்கள் குரலே மகேசன் குரல் என்ற முழக்கம் பற்றி என்ன சொல்கிறீர்கள்?.**

**பதில்:** ஒரு விதத்தில், இந்த முழக்கம் ஒரு தேய்வழக்காகி (Cliche) விட்டது. டிரம்ப், எர்டோகன், நரேந்திரமோடி, ஜெயலலிதா போன்ற சர்வாதிகாரிகள் அனைவருமே, மக்கள் தேர்தலில் வாக்களித்ததின் மூலமே வெற்றி பெற்றார்கள். அம்பானி, அதானி இரட்டையரின் வளர்ச்சியோடு ஒன்றிய ஆட்சிக்கு வருவதற்கு முன்பாக, நரேந்திரமோடி மீண்டும் மீண்டும் குஜராத்தில் தேர்தல் வெற்றிகளை பெற்றார். அப்படியானால், தேர்தல் வெற்றி பெற்ற ஆட்சியாளர்களுக்கு எதிராக, மக்கள் குரலுக்கு எதிராக, மகேசன் குரலுக்கு எதிராக எவரும் போராடக்கூடாது என்று வந்துவிடாதா?

உலகில் முதல் பாட்டாளி வர்க்க ஆட்சி 71 நாட்கள் பாரிஸ் நகரத்தில் பாரிஸ் கம்யூனாக இருந்தது. 1917 நவம்பர் -7 அன்று போராட்ட செங்கொடி சோவியத் ரஷ்யாவில், உழைப்பாளிகளின் ஆட்சியாக உயர்ந்த போது, அதற்கும் தேர்தல் வெற்றிக்கும் எந்த சம்பந்தமும் இல்லை. மக்கள் புரட்சியின் மூலமாக பாட்டாளி வர்க்க ஆட்சி அமைந்தது. நீண்ட பயணத்தை முடித்து, நீண்ட கால மக்கள் யுத்தத்தை வழிநடத்தி, தோழர் மாவோ தலைமையில் சீனத்தின் கம்யூனிஸ்ட் கட்சி ஆட்சிக்கு வந்த போது, ஒருவிதத்தில், துப்பாக்கி முனையில் தான் அதிகாரம் வந்தது. அந்த துப்பாக்கி முனைக்கு பின்னால், மக்களின் போராட்ட பேராதரவு இருந்தது. நிச்சயமாக வரலாற்றை மாற்றி அமைத்த இந்த இரண்டு பெரிய வெற்றிகளும், உலகெங்கிலும் உள்ள மக்களின் மாபெரும் வெற்றிகளும், தேர்தல்களின் மூலமாக வந்தவைகள் அல்ல. கேஸ்ட்ரோ, சேகுவேரா களம் ஆடிய க்யூபாவிலும், அவர்களது வெற்றி தேர்தல்கள் மூலமாக வரவில்லை. பகுத்தறிவு பகலவன் பெரியாரோ, இந்திய அரசமைப்புச் சட்டத்தின் நிறுவனர் அம்பேத்கரோ, மாபெரும் தேர்தல் வெற்றிகளை எந்தக் காலத்திலும் பெற்றவர்கள் அல்ல. மானுடகுல வரலாறு என்றென்றும் ஸ்பார்ட்கசை நினைவில் வைத்திருக்கும். இந்திய வரலாறு என்றென்றும் பகத்சிங்கை, தெலுங்கானா, தெபகா போராட்டங்களை நினைவில் வைத்திருக்கும். தமிழ்நாட்டு வரலாறு, சவுக்கடிக்கும், சாணிப்பாலுக்கும் முடிவுக்கு வர வழிகாட்டிய கம்யூனிஸ்ட் பேராளுமை தோழர் சீனிவாசராவை என்றென்றும் நினைவில் வைத்திருக்கும். இடதுசாரி இயக்கத்தில் எண்ணற்ற தோழர்கள் மக்களுக்காகப் போராடி மடிந்துள்ளனர். தியாகங்கள் பல செய்துள்ளனர்.

ஒரு காலத்தில், இடதுசாரி இயக்கம் ஒன்றுபட்ட தமிழ்நாட்டில் இரண்டாவது பெரிய கட்சியாக இருந்தது. ஒருகட்டத்தில், திராவிட கட்சிகள், இடதுசாரிக் கட்சிகளை தாண்டிச் சென்றுவிட்டார்கள். இன்று மூன்றாவதாக ஒரு கழகம் வந்திருக்கிறது. தேர்தலில் வென்றும் இருக்கிறது. தேர்தல் வெற்றிகள், அந்த வெற்றிகளைத் தேடி தந்த மக்கள் வாக்குகள் மட்டுமே, முதலாளித்துவ அரசியலுக்கு கிராமப்புற மேட்டுக்குடிகளின் அரசியலுக்கு, சுரண்டப்படுகிற உழைக்கும் மக்கள் ஆதரவு தந்துவிட்டதாக மாறாது. நமது வாக்குகள், அவர்களது ஆட்சிகள் என்பது தான், இந்திய நாடாளுமன்ற ஜனநாயக அரசியல், இதுவரை உருவாக்கியுள்ள நிலைமையாக இருக்கிறது.

தேர்தல் அரசியல் என்பது, எதார்த்தத்திற்கு மாறாக தோற்றத்தை முன் நிறுத்துகிறது (REALITY VS PERCEPTION). அப்படியிருக்கும் போது, மக்கள் குரலே மகேசன் குரல் என்பதை, ஒரளவிற்கு மேல் நீட்டிக் கொண்டு செல்ல முடியாது.

தேர்தல் முடிவுகள் மதிக்கப்படவேண்டும் என்பதும், தனிப்பெரும்பான்மை கட்சிக்கு ஆட்சி நடத்த வாய்ப்பு தரப்பட வேண்டும் என்பதும், பொதுவாக சரியான விசயங்களாகும். அதுவும் கூட, இன்றைய குறிப்பான சூழலில் பின் கதவு வழியாக பாஜக ஆளுநர் மூலம் தமிழ்நாட்டில் தலையிட வாய்ப்பு தரக்கூடாது என்ற கோணத்திலிருந்து சரியானதேயாகும்.

ஆனால், தவெக ஆட்சி மட்டுமல்ல, இந்தியாவில் வருகிற எந்த ஆட்சியும் தவறு செய்யும் போது, மக்கள் எதிர்த்துப் போராட உரிமை கொண்டவர்களாவார்கள். தேர்ந்தெடுக்கிற மக்களுக்கு திரும்ப அழைக்கிற உரிமையும் இருந்தாக வேண்டும். வாக்குச் சீட்டுகளை விட, போராட்டக் களங்களில் உறைந்து கொண்டிருக்கிற மக்கள் மாமன்றம், மேலானதாகும். ஆகஸ்ட்-9 அன்று, மாலெ கட்சி, மோடி பதவி விலக வேண்டும் என்ற முழக்கத்தை முன் வைக்கிறது. 2029 வரை மோடி ஆளட்டும் என்று பார்த்துக் கொண்டிருக்க முடியாது. மக்களுக்கு விரோதமாக எந்த ஆட்சி சென்றாலும், அந்த மக்கள் விரோத தன்மையின் தீவிரத்திற்கேற்ப, எந்தக் கட்டத்திலும் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்சிக்கு எதிராகப் போராட, அவசியம் வந்தால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்சி பதவி விலக வேண்டும் என்று அழைப்பு விடுக்க, மக்களுக்கு அதிகாரம் உண்டு.

தூய்மைப் பணியாளர்கள் வங்கக் கடலில் நின்று, கூவத்தில் இறங்கி, ரிப்பன் மாளிகையை முற்றுகையிட்டு நடத்திய போராட்டம், அந்த ஏழைகளும், அவர்களால் உத்வேகமும், உற்சாகமும் பெற்ற தமிழ்நாட்டின் பல்வேறு பிரிவு அடிப்படை தொழிலாளர்களும் நடத்திய போராட்டம், திமுக ஆட்சியின் முடிவுக்கு ஒரு முக்கிய காரணமாக அமைந்தது. அன்று துவங்கி முடியாமல் இருக்கிற தூய்மைப் பணியாளர்கள், டாஸ்மாக் ஊழியர்கள் மற்ற பல்வேறு பிரிவு தொழிலாளர்களின் போராட்டங்கள், இன்றும் திரு.ச.ஜோசப் விஜய் ஆட்சியிடம் நியாயம் கேட்டு நிற்கின்றன.

**கேள்வி: *டிரம்ப் சில தினங்களுக்கு முன்பு, கம்யூனிசம் இரு உலகப்போர்களை விட, மோசமான பேராபத்து என்று சொன்னதன் பின்னணி பற்றி ஏதாவது சொல்ல முடியுமா?.***

**பதில்:** அய்க்கிய அமெரிக்காவில் பெரிய கம்யூனிஸ்ட் கட்சி எதுவும் இல்லை. உலகில், பெரிய கம்யூனிஸ்ட் முகாம் எதுவும் இல்லை. உலகில் எந்த கம்யூனிஸ்ட் கட்சியும் மிகப்பெரிய தேர்தல் வெற்றியை, மிகப்பெரிய போராட்ட வெற்றியை சமீபகாலத்தில் பெறவில்லை. ஆனாலும், 1848ல் கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கையை எழுதும் போது, மார்க்சும், ஏங்கல்சும் அய்ரோப்பா கம்யூனிஸ்ட் பூதம் கண்டு அஞ்சுகிறது என்று எழுதியது போல், இன்று, சர்வ வல்லமை படைத்த டொனால்டு டிரம்ப், கம்யூனிஸ்ட் அரசியல் கண்டு அஞ்சுகிறார்.

சிறிய நாடுகள், பெரிய நாடுகளை வெல்லுகின்றன. வியட்நாமிலிருந்து, ஈராக்கிலிருந்து, ஆப்கானிஸ்தானிலிருந்து வெளியேறிய அய்க்கிய அமெரிக்கா இன்று, ஈரானில் ஆழம் தெரியாமல் காலை விட்டு கதறிக் கொண்டிருக்கிறது. கொடிய இஸ்ரேல் ஆட்சியாளர்களுக்குத் துணைபோய், இன்று தானும் சிக்கிக்கொண்டு முழிக்கிறது. சீனத்தின் போட்டியை சந்திக்க முடியாமல், திணறுகிறது.

அய்க்கிய அமெரிக்காவுக்குள், அட்லாண்டிக் கடலோர நியூயார்க் நகரத்தில் ஜோரன் மம்தானி ஜனநாயக சோசலிசத்தின் குரலை வெற்றிகரமாக ஒலிக்கிறார். பசிபிக் கடலோர லாஸ்ஏஞ்சல்ஸ் நகரில் ஜனநாயக சோசலிசத்தின் குரல் நித்யா ராமன் மூலம் ஒலிக்கிறது. ஆப்பிரிக்க, ஆசிய வம்சாவழியினர் மட்டும் அல்லாமல், அய்ரோப்பிய வம்சாவழியினரும் ஜனநாயக சோசலிஸ்ட்களாகவே, தேர்தல் வெற்றிகள் பெறுகிறார்கள். டிரம்ப் உருவாக்கிய மகா கூட்டணி (Make America Great Again) இன்று சிதறிக்கொண்டிருக்கிறது. இந்தப் பின்னணியில் தான், சுதந்திரம் எதிர் அடக்குமுறை (Freedom Vs Tyranny) என்ற பழைய கதையாடலை, டிரம்ப் மீண்டும் கையில் எடுத்திருக்கிறார். டிரம்ப், அரசியலில் அடி முட்டாள் என்று நாம் காண முடியாது. அவர் முதலாளித்துவத்தின் / ஏகாதிபத்தியத்தின் முதன்மையான பிரதிநிதி யாவார். அவர் மூலதன கூட்டத்தின் ஆட்சிக்கு, கம்யூனிச அரசியலே உள்ளார்ந்த ஆபத்து என்று உணர்ந்துள்ளார் என்பதைத் தான், அவரது சமீபத்திய கம்யூனிசம் தொடர்பான கூப்பாடு காட்டுகிறது.

**கேள்வி: *தமிழ்நாட்டின் இடதுசாரி அரசியல் - நிகழ்காலம், எதிர்காலம்?.***

பதில்: 1967 லிருந்து தமிழ்நாட்டில் திமுக, அஇஅதிமுக ஆட்சிகள் தான் நடந்துள்ளன. கிட்டத்தட்ட 60 ஆண்டுகள் முடிந்த பிறகு, மூன்றாவதாக ஒரு கழகம் வந்துள்ளது. இந்த நேரத்தில், 14.07.2026 தேதிய டைம்ஸ் ஆப் இந்தியா (Times of India )நாளேட்டில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு செயலாளர் தோழர் மு.வீரபாண்டியன் அளித்துள்ள பேட்டி, முற்போக்கு முகாமுக்கு ஆறுதலும், நம்பிக்கையும், மகிழ்ச்சியும் தருவதாக அமைந்துள்ளது. தோழர் மு.வீரபாண்டியன் பேட்டியை டைம்ஸ் ஆப் இந்தியா (Times of India) முதல் பக்கத்திலேயே வெளியிட்டுள்ளது. கொட்டை எழுத்துகளில், தமிழ்நாடு உள்ளாட்சி தேர்தல்களில் இடதுசாரிகள் தனித்து போட்டி என்று அந்தச் செய்தி சொல்கிறது. அதே செய்தி இடதுசாரிகள் சுதந்திரமான அரசியல் அடையாளத்தை தம் வசம் நிறுத்திக் கொள்வார்கள் என்றும் சொல்கிறது. வெளியிலிருந்து ஆதரவு தருகிற அதே நேரம் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்), இந்திய

கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட் லெனினிஸ்ட்) ஆகியவை அமைத்துள்ள இடது முன்னணி, சுதந்திர அரசியல் அடையாளத்தை தக்க வைத்துக் கொள்ளும் என்றும் தோழர் தெரிவித்துள்ளார். “எங்களுக்கு மாநிலம் முழுவதும் அரசியல் பலம் உள்ளது. ஆதரவாளர்கள் இருக்கிறார்கள். நாங்கள் எங்கள் பலத்தை சோதனை செய்ய, சொந்தமாக கிராமப்புற உள்ளாட்சி தேர்தல்களில் போட்டியிடுவோம். நாங்கள் அதற்கு தயாராக இருக்கிறோம்”, என்று தோழர் குறிப்பிட்டுள்ளார். உள்ளாட்சி தேர்தல் என்பதாக தோழர் சொல்வதில், இடதுசாரிக் கட்சிகளின் கூட்டான சுதந்திரமான அரசியல் பயணம் என்பது, அடிப்படையான செய்தியாகும். திமுக, அஇஅதிமுக, தவெக ஆகிய கட்சிகள் எல்லாம் ஜனநாயக கட்சிகள் என்று தோழர் வேறொரு நேரத்தில் தெரிவித்ததாக ஒரு செய்தி வெளி வந்தது. பாஜக எதிர்ப்பு, மாநில உரிமைகள் காப்பது என்ற கோணத்திலிருந்து தான் அவ்வாறு சொல்லி இருக்க வாய்ப்புள்ளது. இந்த மூன்று கழகங்களும், எந்த வர்க்க நலன்களை முன் நிறுத்தும் என்ற கோணத்திலிருந்து, அந்தக் கருத்து வந்திருக்க வாய்ப்பில்லை.

ஜூலை மாதம் 20 ஆம் நாள் இகக(மாலெ)யின் ‘தோழர் கூடம்’ அலுவலகத்தில், மூன்று இடதுசாரிக் கட்சிகளும் சந்திக்கும் போது, தமிழ்நாட்டிற்கான இடதுசாரி அரசியல் பிரகடனம் ஒன்று வெளிவரும் என ஆவலோடு எதிர்ப்பார்க்கிறோம்.

**சுதந்திர இடதுசாரி அரசியல், காலத்தின் கட்டாயமாகும்.**

**சுதந்திர இடதுசாரி அரசியல், வரலாறு விடுக்கின்ற அறைகூவலாகும்.**

## இன்றும் மதுரைவீரன், முத்துப்பட்டன், காத்தவராயன்!

பாடப்படும் கதைகளாகப்
படித்தோம்
சாதிவிட்டு சாதி கலந்து
மனுவின் ஆக்கினைக் காளாகி
மாறுகால் மாறு கை வாங்கப்பட்ட
மதுரை வீரனையும்
உயர் குல வெறி எதிர்த்து
கீழ்க் குலத்தானாகிக்
காதலோடு கலந்து
காதலுக்காய் உயிர்விட்ட
முத்துப் பட்டனையும்
சாதிவிட்டு சாதி கலந்து
மனுவதிகாரத்தின்
மடியில் தீ வைத்துத்
தானிறந்த
காத்தவராயனையும்—.

இன்றும் படித்துக் கொண்டிருக்கிறோம்
தினத்தந்தியில்
முக்கிய செய்திகளில்
வார இதழ்களின்
புலனாய்வுக் கட்டுரைகளில்
ஓரச் செய்திகளாய்
போலீஸ் செய்திகளாய்
நீதிமன்ற செய்திகளாய்
காதலாகிக் கசிந்துருகி
மனிதத்தை உயிர்ப்பிக்கக்
கிளம்பும்
மானுடத்தின் கொழுந்துகளை
வன்மத்தோடு கிள்ளியெறியும்
மனுவின் அதர்மத்தை...

சிறீரசா வின் கவிதைத் தொகுப்பு
சாதி லிங்கம் பக். 79

தலைப்பு: மாலெ தீப்பொறி

# தோழர் எஸ்.பாலகிருஷ்ணன் அவர்களுக்கு செவ்வணக்கம்



இகக(மாலெ) விடுதலை கட்சியின் சென்னை மாவட்ட முன்னணித் தோழர்களில் ஒருவரும் ஜனநாயக தொழிலாளர் சங்கத்தின் பொருளாளருமான தோழர் எஸ்.பாலகிருஷ்ணன் அவர்கள் உடல்நலக் குறைவு காரணமாக 18.07.2026 அன்று மரணமடைந்தார். அம்பத்தூர் தொழிற்பேட்டையில் குணால் ஆலைத் தொழிலாளியாக இருந்து தொழிற்சங்கத் தலைவராகி, உழைக்கும் மக்களின் உரிமைக்காக தன் வாழ்நாள் முழுவதும் பணி செய்து வந்தார். தோழரை இழந்து வாடும் குடும்பத்தினருக்கும் தோழர்களுக்கும் இகக(மாலெ) தமிழ்நாடு மாநிலக்குழு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது. தோழர் எஸ். பாலகிருஷ்ணன் அவர்களுக்கு செவ்வணக்கம்

## வரும் மழைக்கால கூட்டத்தொடரிலேயே பெண்கள் இடஒதுக்கீடு மசோதாவை நிபந்தனையின்றி நிறைவேற்றுங்கள்!

## பெண்கள் இடஒதுக்கீடு மசோதாவை தொகுதி மறுவரையறையுடன் இணைக்கும் மதவாத அரசியலை ஒருபோதும் அனுமதிக்க முடியாது!

பல்வேறு பெண்கள் அமைப்புகள், சிவில் சமூகக் குழுக்களுடன் இணைந்து அகில இந்திய முற்போக்கு பெண்கள் கழகம் (அஇமுபெக) 10.07.2026 அன்று இந்திய பிரஸ் கிளப்பில் செய்தியாளர் சந்திப்புக்கு ஏற்பாடு செய்திருந்தது.

பெண்கள் இடஒதுக்கீட்டுக்கான தேசிய கூட்டமைப்பு என்ற பதாகையின் கீழ், பெண்கள் இடஒதுக்கீடு மசோதாவை உடனடியாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்ற கோரிக்கை அன்றைய செய்தியாளர் சந்திப்பில் முன்வைக்கப்பட்டது.

இந்த அரசமைப்புச் சட்டத் திருத்த மசோதாவை 'நாரி சக்தி வந்தன்' (பெண் சக்தியை வணங்குதல்) என்பதோடு இணைத்து, அதன் மூலம் தனது மதவாத நிகழ்ச்சி நிரலை பாஜக அரசாங்கம் முன்னெடுக்கத் துடிக்கிறது.

அன்றைய செய்தியாளர் சந்திப்பில் உரையாற்றிய அஇமுபெக தேசிய செயலாளர் தோழர் சுவேதா ராஜ், "கடந்த மக்களவைக் கூட்டத்தொடரில், பல்வேறு பெண்கள் அமைப்புகளும், எதிர்க்கட்சிகளும் இணைந்து பாஜகவின் மதவாத நிகழ்ச்சி நிரலை எதிர்த்துப் பின்தள்ளின. இருப்பினும், 2023 ஆம் ஆண்டு நாடாளுமன்றத்தில் ஒருமனதாக நிறைவேற்றப்பட்ட பெண்கள் இடஒதுக்கீடு மசோதா, இன்றுவரை களத்தில் நடைமுறைப்படுத்தப்படாதது துரதிர்ஷ்டவசமானது. பாஜக அரசாங்கம் இந்தியப் பெண்களிடம் தொடர்ந்து பொய் சொல்லி வருகிறது. பாஜக அரசாங்கத்தின் பெண்களுக்கு எதிரான இந்த சதி ஒருபோதும் வெற்றி பெறாது" என்று தெரிவித்தார்.

பெண்கள் இடஒதுக்கீடு மசோதாவை எந்த நிபந்தனையுமின்றி உடனடியாக நிறைவேற்ற வேண்டும் என்று நாங்கள் கோருகிறோம். நடைமுறையில் இருக்கும் தற்போதைய மக்களவை மற்றும் சட்டமன்றத் தொகுதிகளிலேயே பெண்கள் இடஒதுக்கீட்டை உடனடியாக அமல்படுத்த வேண்டும் என்றும் நாங்கள் வலியுறுத்துகிறோம்.

**அகில இந்திய முற்போக்கு பெண்கள் கழகம்**

**பெண்கள் அமைப்பினர் பல்வேறு கட்சித் தலைவர்களைச் சந்தித்து பெண்கள் இட ஒதுக்கீடு மசோதாவை நிபந்தனையின்றி நிறைவேற்ற ஆதரவு திரட்டினர்**













# “திடக்கழிவு காலனியம்” – சுற்றுச்சூழல் குறித்த சென்னை உயர்நீதிமன்றத் தீர்ப்பு வரவேற்புக்குரியது.



பருவநிலை மாற்றங்களால் ஜூலையில் இரண்டாவது கோடையை தமிழக மக்கள் அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். லாபத்துக்கான ‘முதலாளித்துவ வளர்ச்சி மாதிரி’, சுற்றுச்சூழல் மீது பெரிய தாக்கத்தை ஏற்படுத்தி வருகிறது. திட்டமிடப்படாத, ஊழல், கொள்ளைக்கான நகர்மயமாக்கம், ஆறு, ஏரி, கண்மாய், குளம், குட்டை, என அனைத்தையும் மாசுபடுத்தி வருகிறது. திடக்கழிவு மேலாளுமை நவீனப்படுத்தப்படாததால் தூய்மைப் பணியாளர்கள் பலவித நோய்களுக்கு ஆட்பட்டு வருகிறார்கள். மலக்குழி மரணங்களும் நிகழ்கின்றன. பெரும் ஆலைக் கழிவுகளும் கண்மூடித்தனமான பிளாஸ்டிக் நுகர்வுக்கு வழிவகுக்கும் கொள்கைகளும் பருவநிலை மாற்றத்தில் ஆபத்தான தாக்கம் செலுத்துகின்றன.

ஒரு அதிர்ச்சி செய்தி! அய்க்கிய அமெரிக்கா, சிங்கப்பூரிலிருந்து காகிதக் கழிவுகள் என்று ஸ்ரீபதி பேப்பர் & போர்டு லிமிடெட் கம்பெனிக்கு இறக்குமதி செய்யப்பட்ட கண்டைனர்களை சுங்கத்துறையினர் ஆய்வு செய்தபோது அதில், பெட் (PET)பாட்டில்கள், உடைந்த பீங்கான்கள், கண்ணாடி பாட்டில்கள், தெருவைக் கூட்டி அள்ளிய குப்பைகள், பிளாஸ்டிக் பேக்குகள், இன்ன பிற இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. அவற்றைத் திருப்பி அனுப்ப வேண்டும் என்று சுங்கத்துறை, மாசு கட்டுப்பாட்டு வாரியம் ஆகியவை அறிவுறுத்திய நிலையில், வழக்கு நீதிமன்றத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டது. இறக்குமதி செய்த ஸ்ரீபதி கம்பெனி கழிவுப் பொருட்களை துபாய்க்கு அனுப்ப அல்லது இந்தியாவிலேயே அழிக்க அனுமதி கோரியிருந்தது.

இந்த வழக்கில் உயர்நீதிமன்ற மதுரை கிளை நீதிபதி பரத சக்கரவர்த்தி அளித்த தீர்ப்பு முக்கியத்துவமானது. அவர், ஸ்ரீபதி பேப்பர்ஸ் எதிர் சுங்கத்துறை ஆணையர் (2026 MHC 2215) தீர்ப்பில் வெளிநாட்டில் உற்பத்தி செய்யப்படும் கழிவுகளை கொட்டும் இடமாக இந்தியாவை மாற்ற முடியாது. அரசமைப்புச் சட்டம் வழங்கியுள்ள வாழ்வுரிமையானது சுற்றுச்சூழல் சீரழிவு, சுற்றுச்சூழல் சுமைகளை காலனித்துவ முறையில் மாற்றுதல் ஆகியவற்றிலிருந்து பாதுகாப்பதையும் உள்ளடக்கியது என்றும் தனது தீர்ப்பில் தெளிவாகக் குறிப்பிட்டார்.

இந்தத் தீர்ப்பானது நீதிமன்ற வழக்கை சுங்க வகைப்பாடு, வணிக ரீதியிலான சிரமங்கள் எனப் பார்க்காமல், கழிவு இயக்கத்தின் சட்டக் கோட்பாடுகள் மற்றும் அரசியல் பொருளாதாரத்திற்குள் அணுகியதே முக்கியத்துவமானதாகும். இந்தத் தீர்ப்பில், 2016ஆம் ஆண்டின் அபாயகரமான திடக் கழிவுகள் மேலாளுமை மற்றும் எல்லை கடந்த இயக்க விதிகளின் 15(2)ஐ பாசல் கன்வென்ஷனில் ( Basel convention ) சட்ட விரோத கடத்தல் பிரிவு (9) உடன் நீதிமன்றம் இணைத்துப் பார்த்தது.

தொலைதூரம், செலவு ஆகிய காரணங்களைக் காட்டி கழிவுகளை வேறு நாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய (துபாய்க்கு) கம்பெனி கோரியதை நீதிமன்றம் சரியாகவே நிராகரித்து விட்டது. நடுநிலையான உலக வர்த்தக உறவுகள் என்று சொல்லிக்கொண்டு, பணக்கார நாடுகளுக்கு சுத்தமான காற்று, ஒழுங்குபடுத்தப்பட்ட கழிவகற்றல், அதிக நுகர்வு என்றும், ஏழை நாடுகளுக்கு நச்சு எச்சங்கள், பாதுகாப்பற்ற பணிச் சூழல், சுற்றுச்சூழல் எனவும் இருப்பதை அங்கீகரித்த தீர்ப்பு, “கழிவு காலனித்துவம்” என்பது ஒரு விபத்தல்ல, திட்டமிட்ட வழிமுறை என்று வெகு அழுத்தமாக சுட்டிக்காட்டியுள்ளது.

மேலும் இறையாளுமை என்பது வெறும் எல்லைகளை கட்டுப்படுத்துவது மட்டுமல்ல என்று குறிப்பிட்ட நீதிமன்றம், நச்சு சுமையை மறுப்பதற்கான மக்களின் உரிமையையும் உள்ளடக்கியது என்று தீர்ப்பு தெளிவுபடுத்தி உள்ளது. திடக்கழிவுகளை கொட்ட அனுமதிக்கும் சட்ட அமைப்பானது, சுற்றுச்சூழல் அடிமைத்தனத்துக்கான கருவியாக மாறிவிடும் என்றும் சொல்லி உள்ளது.

இது, சட்டவிரோத செயலின் சுமையை துறைமுகத் தொழிலாளர், தூய்மைப் பணியாளர்கள், கண்டைனர் யார்டுகள், மறு சுழற்சி தளங்களுக்கு அருகில் வாழ்பவர்கள் மீது ஏற்றி விடுவதாக அமையும் என்று சொல்லிவிட்டு, சுற்றுச்சூழல் நீதி என்பது கழிவுகளை சுவாசிக்கவும், தொடவும், சுமக்கவும், அதற்கு அருகிலேயே வாழவும் நிர்பந்தப்படுத்தப்பட்டவர்களின் வாழ்க்கையில் இருந்து தொடங்க வேண்டுமென்கிறது. தொடர்ந்து,“மாசுபடுத்துபவரே பணம் செலுத்த வேண்டும்”(pol–luter pays principle) என்ற கோட்பாடு சரியானது என்றும் சுட்டிக்காட்டி இருக்கிறது.

இந்தத் தீர்ப்பினை ஒரு கட்டளையாக ஏற்று சுங்கத்துறை அதிகாரிகள், மாசு கட்டுப்பாடு வாரியம், ஒன்றிய, மாநில அரசுகள் செயல்படுத்த வேண்டுமென்று அனைத்திந்திய நீதிக்கான வழக்கறிஞர்கள் சங்கம் (AILAJ) வேண்டுகோள் விடுத்துள்ளது.

**– தேசிகன்**

அவிகிதொச உறுப்பினர் சேர்ப்பு இயக்கம்:

# அவிகிதொச வலுப்பெற ஊராட்சி அமைப்பாளர்கள் தேவை

அவிகிதொச உறுப்பினர் சேர்ப்பில் பெண்களே அதிக அளவில் சேர்கிறார்கள். "விவசாய வேலைகள் நாளுக்கு நாள் குறைஞ்சிகிட்டே வருது. மாற்று வேலை எதுவுமில்ல. ஒத்த வேலைய பத்து பேர் பங்கு போட்டுக்கிற நிலம. வயத்துபாட்டுக்கு இந்த நூறு நா வேலதான் அதுலயும் மண்ணள்ளி போடறாங்க பாவிங்க" தங்களது ஆதங்கத்தை அவர்களுக்கே உரிய கோப மொழியில் சொல்கின்றனர் விவசாயத் தொழிலாளர். பந்துவ கோட்டை, புதுவயல், ஆண்டிக் குளப்பம்பட்டி கிராமங்களில் அவிகிதொச உறுப்பினர் சேர்ப்பு இயக்கத்தின் போது நாங்கள் சந்தித்த தொழிலாளர், உறுப்பினராக சேர்ந்த அனைவரும் ஒரே குரலில் மேற்கண்ட கருத்துகளைத் தெரிவித்தனர்.

"மோடி, 125 நாள் வேல தர்றபோறதா சொல்றாங்க, நீங்க என்னடானா வேலய பறிக்கப் போறதால்ல சொல்றீங்க" ன்னு அச்சப்பட்டு கேட்டவர்களிடம், " இந்த வருஷத்தில் இதுவரை 12 நாட்கள்தான் வேலை தந்ததாகச் சொல்றீங்க. 100 நாள் வேலை தரவேண்டும் என்ற திட்டத்தின் படியே 12 நாள்தான் வேலை கொடுத்திருக்காங்கன்னா இவங்க எப்படி 125 நாள் வேலை கொடுப்பாங்க? " என்று கேட்டோம். "ஆமா தம்பி, உண்மதான், செஞ்ச வேலக்கு பல மாசமா சம்பளம் தரல. குழுக்காரங்க வேற பணத்த கட்டச் சொல்லி நச்சரிக்கிறாங்க. கண்ண படம் எடுக்குறோம், கைரேக படம் எடுக்குறோம் என்று சொல்லி படம் எடுக்குறாங்க. இது ஒம் படம் இல்ல வேல இல்ல போ போன்னு விரட்டுறாங்க தம்பி" ன்னு கடும் கோபத்தோட பொரிந்து தள்ளினார்கள். இதற்காக, ஆகஸ்ட் மாதம் போராட்டம் நடத்தப்போகிறோம் என்று சொன்னதும் "நாங்கல்லாம் ஒண்ணா கலந்துக்குறோமுன்னு" கோரசாக சொன்னார்கள்.

பந்துவக் கோட்டைக்கு வேலைக்கு வந்த தொழிலாளி ஒருவர் எங்களை புதுவயலுக்கு அழைத்துச் சென்று அங்குள்ளவர்களை உறுப்பினராக வைத்தார். எங்கள் குழுவிலிருந்த அனைவருக்கும் காலை சிற்றுண்டியும் வழங்கினார். அந்த ஊருக்கு சாலைவசதி இல்லாததால் பிள்ளைகள் 4 கிலோமீட்டர் சுற்றி செல்ல வேண்டியிருக்கிறது என அவர்களது ஊர் பிரச்சனையை எங்களுடன் பகிர்ந்து கொண்டனர். "போராட்டம் பண்ணினோம். வாக்குறுதி கொடுத்தார்கள். இன்னும் செய்து கொடுக்கல. விடமாட்டோம். தொடர்ந்து போராடுவோம் என்று உறுதிபட தெரிவித்தனர்.

4 நாட்கள் செயல்பட்ட எமது குழுவில் தோழர்கள் ஜெபி, இளவரசன், மணிமேகலை, சசிகலா, சரோஜா, ஜோதி, ரெங்கசாமி உள்ளிட்டோர் இருந்தனர். தோழர் மணிமேகலை நாள்தோறும் 40 கிலோமீட்டர் ஸ்கூட்டியில் தனியாக பயணம் செய்து கலந்து கொண்டது குறிப்பிடத்தக்கது.

புதுக்கோட்டை மாவட்டம் கறம்பக்குடி ஒன்றியத்தில் உறுப்பினர் சேர்ப்பு இயக்கத்தில் பங்குபெற்ற

**தோழர் எ. கோவிந்தராஜ்**

ஆயிரத்து இருநூறு வேலை அட்டை கொண்ட திருவிளையாட்டம் கிராமத்தில் 280 பேருக்கு படம் விழவில்லை என்று கூறி வேலை இல்லை என்று திருப்பி அனுப்பிவிட்டதாக ஏஅய்சிசிடியூ மாநிலச் செயலாளர் வீரச்செல்வன் கூறுகிறார். ஆண்களைவிட பெண்கள்தான், 90%, உறுப்பினராக ஆர்வமுடன் சேர்கின்றனர். நமது தலைவர்களுக்கு அறிமுகமுள்ள கிராமங்களில், தொழிலாளர் ஒரு மய்யமான இடத்துக்கு வந்து உறுப்பினராகின்றனர். வீடுவீடாகச் சென்று உறுப்பினர் சேர்க்கும் இடங்களிலும் ஆர்வமுடன் சேர்கின்றனர். எவரும் தவறாமல் ரூ 5 உறுப்பினர் கட்டணம் தருகின்றனர்.

விவசாயத்தொழிலாளரும் கிராமப்புர தொழிலாளரும் கடன்சங்கிலியில் சிக்கித்தவிக்கின்றனர். கடன் துன்பம் தாங்கமுடியாமல் ஊரைவிட்டே வெளியேறி உள்ளனர். சிலர் தற்கொலை செய்துகொண்டுள்ளனர்.

உறுப்பினராவதில், அமைப்பாவதில் பெரும் ஆர்வம் காட்டுகின்றனர். அதே சமயம் அமைப்பாவதைத் தடுக்கும் தடைகளும் உள்ளன. உறுப்பினர் சேர்ப்புக்கு பிறகு தொடர்பு நீடிப்பதில்லை. அதனால் ஒவ்வொரு முறையும் புதிதாக உறுப்பினர் போடுகிற நிலை உருவாகி விடுகிறது. பெரிய எண்ணிக்கையில் உறுப்பினர் சேர்ப்பும் நடத்த முடிவதில்லை. எனவே, ஒவ்வொரு கிராம அளவிலும் தொழிலாளரை அமைப்பாக்கும் அமைப்பாளர் தேவை. ஊராட்சி மாநாடுகள் நடத்துவது, ஊராட்சி அமைப்பை ஏற்படுத்தி ஊராட்சி ஒன்றுக்கு அடையாளம் காணப்பட்ட இளம் பெண், ஆண் தொழிலாளருக்கு பயிற்சி அளிக்க வேண்டும். ஊராட்சி அமைப்புகளை அவர்களே வழிநடத்தும் உத்தரவாதத்தை ஏற்படுத்திட வேண்டும். அப்போதுதான், அவிகிதொச வுக்கான வலைப்பின்னலும் ஊராட்சி அளவிலான துடிப்பான கிளர்ச்சிகளும் சாத்தியம்.

மயிலாடுதுறை மாவட்டத்தில் அவிகிதொச உறுப்பினர் சேர்ப்பு இயக்கத்தில் பங்குபெற்ற

**தோழர் எஸ். ஜானகிராமன்**

என்னென்னமோ நடக்குது. அப்பெல்லாம் நாட்டுக்காக உசுர விட்டவங்களுக்கு அரசு மரியாதை தந்தாங்க. இப்பெல்லாம் சினிமாகாரங்களுக்கு (பாக்கியராஜ்) அரசு மரியாதை தர்றாங்க....!?

**—மாரியம்மா**

(பாபநாசம் ஒன்றியத்தில் நடைபெற்ற உறுப்பினர் சேர்ப்பு இயக்கத்தின் போது கூறியது).



# என்எல்சி பங்கு விற்பனை: தேச விரோதம்!




"நெய்வேலி நிலக்கரி நிறுவனத்தின் 3% (4.16 கோடி) பங்குகளை மோடி அரசு அவசர அவசரமாக விற்று ரூபாய் 1263 கோடியை அறுவடை செய்துள்ளது. அரசுப்பங்கு 69.47% ஆக விழுந்துள்ளது. நவரத்னா என பெருமைபட பேசப்படும் நெய்வேலி லிக்னைட் நிறுவனம் அய்ந்து மாநிலங்கள், ஒரு யூனியன் பிரதேசம் (அந்தமான்-நிகோபார்) வரை கால்பதித்து அகில இந்திய நிறுவனமாக உருவெடுத்துள்ளது. ரூ. 69 கோடி முதலீட்டில் தொடங்கப்பட்ட இந்நிறுவனம் 70 ஆண்டுகளில் ரூ.70 ஆயிரம் கோடி சொத்து மதிப்பைக் கொண்ட நிறுவனமாக தழைத்துள்ளது. பழுப்பு நிலக்கரியிலிருந்து மின்னுற்பத்தி செய்யத் தொடங்கிய இந்நிறுவனம் சூரிய ஒளி, காற்றாலை என விரிந்து அணுமின்னுற்பத்தி செய்யவும் ஒப்பந்தம் செய்துள்ளது.

ஆல்போல் தழைத்துள்ள என்எல்சி நிறுவனம், 65 ஆயிரம் ஏக்கருக்கு மேற்பட்ட பச்சைபசேலென தழைத்து வளர்ந்த வயல்களை அழித்து வளர்ந்த நிறுவனம். நெய்வேலியை சுற்றியுள்ள, கம்மாபுரம், கோபாலபுரம், சாத்தப்பாடி, முத்துகிருஷ்ணாபுரம், அஜிஸ்நகர், கங்கைகொண்டான் உள்ளிட்ட 44 கிராமங்களின் 36,825 ஏக்கர் நிலங்களை அபகரித்து வளர்ந்த நிறுவனம். நிலம் கொடுத்த விவசாயிகளுக்கு சட்டப்படி இழப்பீடு வழங்காமலும் வாக்குறுதிப்படி நிரந்தர வேலை வழங்காமலும் வீட்டுமனை இழந்தவர்களுக்கு மாற்று குடியிருப்பு, இழப்பீடு வழங்காமலும் ஏமாற்றி வருகிற ஒன்றிய அரசின் பொதுத்துறை நிறுவனம். இந்திரா நகர் மக்கள், மாற்று குடியிருப்பு கேட்டு, இழப்பீடு கேட்டு இந்த நிமிடம் வரை போராடி வருகின்றனர்.

தமிழ்நாடு, கேரளா ஆந்திரா கர்நாடகா மற்றும் புதுச்சேரி மாநிலங்களின் மின் தேவையை பூர்த்தி செய்து வரும் இந்நிறுவனம் தொடர்ந்து லாபத்தில் இயங்கிவருகிறது. இந்த ஆண்டு மட்டும் ரூ.3,670 கோடி லாபம் ஈட்டியுள்ளது.

ஒட்டுமொத்த மின்துறையை (உற்பத்தி, விநியோகம்) அதானி அம்பானிகளிடம் தாரைவார்ப்பதே மோடி அரசின் கொள்கை. தமிழ்நாட்டின் 5000 ஏக்கர் பரப்பில் சோலார்மின்சாரம் தயாரித்து வரும் அதானி ஜார்க்கண்டிலும் ஒரிசாவிலும் கால்பதிப்பதை எதிர்த்து பழங்குடி மக்கள் அஞ்சாமல் போராடி வருகின்றனர். நிலம் தந்த விவசாயிகள், உழைப்பைத் தந்த தொழிலாளர், அவர்களை உழைப்புக்கு தயார் செய்து தந்த பெண்கள் இவர்கள் அனைவரும், ஒட்டுமொத்த சமூகமாக உருவாக்கிய தேச வளத்தை, பொதுத்துறை பங்குகளை தனியாருக்கு விற்பது மட்டுமே மோடி-அமித்ஷா கொள்கை. சமூகம் உருவாக்கிய தேசவளத்தை அதானி, அம்பானிக்கு தாரை வார்ப்பது தேச விரோதம்.

பீகாரில் 1100 ஏக்கர் நிலத்தை மாதம் 1 ரூபாய் குத்தகைக்கு 33 ஆண்டுகளுக்கு கொடுத்துள்ளது அங்குள்ள அரசு. இதில் உற்பத்தி செய்யும் மின்சாரத்தை யூனிட் ஒன்றுக்கு 6 ரூபாய் வீதம் வாங்கிக் கொள்ள நிலம் கொடுத்த பீகார் அரசு அதானியுடன் ஒப்பந்தம் போட்டுள்ளது. இது யாருக்கு லாபம்? அதானிகளுக்கு லாபம். நுகர்வோருக்கு பெரும் நட்டம். தனியார்மய, தாராளமயக் கொள்கைகள் மோடி ஆட்சியில் அதானி மயம், அம்பானி மயமாகி இருக்கிறது.

என்எல்சி பங்குகளை வாங்கியவர்கள் இயக்குநர்களாக வந்து உட்காருவார்கள். மின்சார விலையை உயர்த்த உத்தரவு போடுவார்கள். இன்று யூனிட் 3 ரூபாய்க்கு விற்கும் என்எல்சி மின்சாரம் விலை ஏறும். தமிழ்நாட்டில், 20 லட்சத்துக்கு மேற்பட்ட பம்ப் செட் விவசாயிகள் பாதிக்கப்படுவார்கள். 200 யூனிட் இலவச மின்சாரம் பயன்படுத்தும் சாமான்ய மக்கள், விசைத்தறி உரிமையாளர், தொழிலாளர் தெருவில் நிற்பார்கள். மோடி அரசால் கொண்டுவரப்பட்டுள்ள புதிய மின்சார திருத்தச்சட்டம் இதை நோக்கியே நாட்டை இழுத்துச் செல்கிறது. பங்கு விற்பனைகள் வெறும் அரசுக்கு பணம்திரட்டும் முயற்சியல்ல. நாட்டை கடுமையான பொருளாதார நெருக்கடியில் தள்ளும் திட்டமாகும்.

ஆகவே, தேச வளங்கள் அம்பானி,

அதானிகளுக்கு தாரை வார்க்கப்படுவதை கண்டிக்கிறோம் விவசாயிகளால், தொழிலாளரால், உழைப்பாளி மக்களால் உருவாக்கப்பட்டுள்ள பிரமாண்டமான தேச வளங்களை தனியாருக்கு தாரைவார்க்கும் தேசவிரோத திட்டம் தடுத்து நிறுத்தப்பட வேண்டும். என்.எல்.சி யின் மூன்று சதவீத பங்குகள் விற்பனையை உடனடியாக ரத்து செய்ய வேண்டும். பல ஆயிரக்கணக்கான தொழிலாளரின் வேலை வாய்ப்பு சிதைக்கப்படும், அருகாமை மாவட்டங்களின் மக்களின் வாழ்வாதாரம், வேலைவாய்ப்பு பறிபோகும், வியாபாரிகள், வர்த்தகர்கள், விவசாயிகள் பாதிக்கப்படும் இந்த திட்டத்தை தடுத்து நிறுத்தியாக வேண்டும்.

ஆகவே என்.எல்.சி யின் பங்குகள் விற்பனையை உடனடியாக ரத்து செய்யவேண்டும்.

உச்சநீதிமன்ற தீர்ப்பின்படி பல்லாயி ரக்கணக்கான ஒப்பந்த தொழிலாளரை நிரந்தரப்படுத்திட வேண்டும்

நிலம், வீடு கொடுத்து காத்திருக்கின்ற விவசாயிகளுக்கு சட்டப்படியான இழப்பீட்டை வழங்கிட வேண்டும்.

என்எல்சியால் பாதிக்கப்பட்டுள்ள சுற்றுச்சூழலை முழுவதுமாக மீட்டெடுக்க என்எல்சியும் ஒன்றிய மோடி அரசும் பொறுப்பேற்று செய்து முடிக்க வேண்டும்.

இந்த கோரிக்கைகள் மீது இகக (மா லெ), இகக(மா), இகக உள்ளிட்ட இடதுசாரி கட்சிகள், தொழிற்சங்கங்கள் விவசாயிகள், தொழிலாளர், அனைத்து தரப்பு மக்களை அணிதிரட்டிட வேண்டும். முன்பு இதுபோல் பங்கு விற்பனை செய்யப்பட்டபோது நெய்வேலி தொழிலாளர் வர்க்கம், இடதுசாரி கட்சிகள், வணிகர்கள், கடலூர் மாவட்ட பொது மக்களின் எழுச்சிமிக்க போராட்டம், விற்பனை செய்யப்பட விருந்த பங்குகளை ஜெயலலிதா ஆட்சியை வாங்கும் படி கட்டாயப்படுத்தியது.

பங்குவிற்பனை வேண்டாமென்று மோடி ஆட்சிக்கு கடிதம் எழுதியுள்ள தவெக ஆட்சி, எதிர்க்கட்சி எம்எல்ஏக்களை வாங்குவதில் மும்முரமாக இறங்கி உள்ளது. கடிதம் எழுதியதோடு நின்றுவிடக்கூடாது என தமிழக மக்கள், தமிழ்நாடு தொழிலாளர் வர்க்கம், ஜெ ஆட்சியை இறங்கிவரச் செய்ததை நினைவுபடுத்தி தவெக அரசுக்கு எச்சரிக்கை விடுத்தாக வேண்டும்.

**—சி.ராஜசங்கர்**



**என்எல்சி பங்கை மோடி அரசு விற்பனை செய்ததைக் கண்டித்து இககமாலெ, இககமா, இகக ஆகிய இடதுசாரிக் கட்சிகளின் ஒருங்கிணைப்புக் குழு சார்பில், ஜுலை 7 அன்று, சிபிஐஎம் மாவட்டச் செயலாளர் கோ. மாதவன் தலைமையில் நெய்வேலி எட்டு ரோடு சந்திப்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. கண்டன ஆர்ப்பாட்டத்தில்,**
**இகக (மா) மாநிலச் செயலாளர் பெ.சண்முகம், இகக மாநிலச் செயலாளர் மு. வீரபாண்டியன், இகக(மாலெ) மத்தியக் கமிட்டி உறுப்பினர் பாலசுந்தரம் சிறப்புரையாற்றினர்.**
**இகக (மா) மாநிலச் செயற்குழு உறுப்பினர் எஸ். கண்ணன், மாநிலக்குழு உறுப்பினர் எஸ். ஜி. ரமேஷ்பாபு, இகக மாநில நிர்வாகக் குழு உறுப்பினர்கள் எம். ராதாகிருஷ்ணன், டி. மாணிக்கவாசகம், மாவட்டச் செயலாளர் பி. துரை, இகக(மாலெ) மாநிலக் குழு உறுப்பினர்கள் ராஜசங்கர், டி.கலியமூர்த்தி ஆகியோர் கண்டன உரையாற்றினர்.**

# “மரணப் படுக்கையில் இந்தியப் பொருளாதாரம்! வீதியில் இறங்கு! வீட்டையும் – நாட்டையும் பாதுகாத்திடு!” கருத்தரங்கம்

**(2026, ஜூலை 5 அன்று திருச்சியில், மக்கள் அதிகாரம் பெரம்பலூர் மாவட்டச் செயலாளர் காவிரிநாடன் தலைமையில் நடைபெற்ற கருத்தரங்கத்தில், மக்கள் அதிகாரம் மாநிலப் பொதுச் செயலாளர் திருச்சி செழியன், பு.ஜ.தொ.மு. மாநிலப் பொதுச் செயலாளர் லோகநாதன், இகக(மாலெ) மாநிலக்குழு உறுப்பினர் மு.இராமச்சந்திரன் உரையாற்றினர். இகக(மாலெ) மாநில நிலைக்குழு உறுப்பினர் க.ஞானதேசிகன் கலந்துகொண்டார். கருத்தரங்கில் மு.இராமச்சந்திரன் ஆற்றிய உரையிலிருந்து)**




மரணப் படுக்கையில் இந்தியப் பொருளாதாரம்; மீண்டெழுமா? அல்லது குற்றுயிரும், குலை உயிருமாய் படுத்தே கிடக்குமா? என்பது கார்ப்பரேட் காவிப் பாசிச மோடி அரசின் கொள்கைகளைப் பின்னுக்குத் தள்ளுவதோடு தொடர்புடையது. இந்தக் கருத்தரங்கம் ஒரு பொருத்தமான நிகழ்வென்பதால், முதலில் இதே ஜூலை 5ல், ஒன்றிய பாசிச மோடி அரசின் நிறுவனரீதியான படுகொலைக்கு ஆளான பாதிரியார் ஸ்டேன்சாமிக்கு நமது செவ்வணக்கத்தை தெரிவிப்பது நமது கடமையாகும்.

மோடியின் கார்ப்பரேட் கல்விக் கொள்கைகளால், உருவான “நீட் உள்ளிட்ட தேர்வு முறைகேடுகளுக்குப் பொறுப்பேற்று ஒன்றிய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் பதவி விலக வேண்டும்” என்று தில்லியில் நடைபெறும் இளைஞர்கள், மாணவர்கள் போராட்டத்தில், கல்வியாளரும், சுற்றுச்சூழல் ஆர்வலருமான ‘சோனம் வாங்சுக்’கும், அகில இந்திய மாணவர் கழகத்தைச் (AISA)சேர்ந்த மாணவர்களும் காலவரையற்ற உண்ணாநிலைப் போராட்டம் மேற்கொண்டு வருகிறார்கள். போராடும் தோழர்களுக்கு நமது ஒருமைப்பாட்டைத் தெரிவித்துக் கொள்வதும் அவசியமாகிறது.

அதல பாதாளத்தில் மக்கள் வாழ்க்கை

மோடி ஆட்சிக்கு முன்பு ஒரு லிட்டர் பெட்ரோல் 60 ரூபாயாக இருந்தபோது உலகச் சந்தையில் கச்சா எண்ணெய் பீப்பாய் ஒன்றுக்கு 105 டாலராக இருந்தது. மோடி ஆட்சியின் பெரும்பகுதியில், கச்சா எண்ணெய் விலை குறிப்பிடத்தக்க அளவு குறைவாகவே (பீப்பாய் 40 - 65 டாலருக்குள்) இருந்தது. ஆனால் இந்த விலை இறக்கத்தின் பலன்களை சாதாரண மக்களுக்கு கொண்டு சேர்க்காமல், அம்பானி குழுமம் கொள்ளை லாபம் ஈட்டவும், கார்ப்பரேட்டுகளுக்கு வரியைக் குறைக்கவும் மோடி அரசு பயன்படுத்திக்கொண்டது. கச்சா எண்ணெய் விலை உயரும்போதெல்லாம் பெட்ரோல் விலையை ஏற்றியும், கச்சா எண்ணெய் விலை குறையும்போதெல்லாம் வரியை உயர்த்தியும், விலை உயர்வு, வரி உயர்வு என மாறி மாறி மக்களைக் கொள்ளையடிக்கிறது மோடி அரசு. இவ்வளவு கொள்ளையடித்த பிறகும் கூட அவசரகாலத் தேவையை எதிர்கொள்ளத் தேவையான கச்சா எண்ணெய் கையிருப்புக்கான உட்கட்டமைப்பு வசதியை உருவாக்க மோடி அரசு கவலைப்படவில்லை. இந்தியாவின் கச்சா எண்ணெய் கையிருப்பு வெறும் 2.1 கோடி பீப்பாய்தான் (சீனத்தின் கையிருப்போ 139.7 கோடி. கிட்டத்தட்ட 67 மடங்கு அதிகம்).

நெருக்கடியை உருவாக்கிய இந்த அரசு, பொதுப் போக்குவரத்தைப் பயன்படுத்துங்கள்; தங்கம் வாங்காதீர்கள்; வெளிநாட்டுக்குச் செல்லாதீர்கள்; சமையல் எண்ணெய் பயன்பாட்டைக் குறையுங்கள் (சாப்பாட்டைக் குறையுங்கள் என்று சொல்வதுதான் பாக்கி) என மக்களுக்கு உபதேசம் செய்கிறது.

மோடியின் சிக்கன நடவடிக்கைகள் கேலிக்கூத்தானவை. அரசாங்கத்தின் சொந்தக் கொள்கைகளால், குறிப்பாக கார்ப்பரேட் ஆதரவு பொருளாதாரக் கொள்கைகளாலும் அமெரிக்க சார்பு வெளியுறவுக் கொள்கைகளாலும் உருவான நெருக்கடிக்குப் பொறுப்பேற்பதற்குப் பதிலாக, அதன் சுமையைச் சாதாரண மக்கள் மீது மடை மாற்றிவிடுவதில்தான் இந்த ஆட்சி தீவிரமாக உள்ளது. வெடித்துக்கிளம்புகிற பல்வகைப்பட்ட மக்கள் போராட்டங்களும், மக்கள் போராட்டங்களைத் தீவிரப்படுத்த இடதுசாரிகளின் ஒன்றுபட்ட முன்முயற்சிகளும் இதனை தடுத்து நிறுத்தும்.

# சங்கிப் படை வங்கத்தை இதன் ஆய்வுக் கூடமாக மாற்றுவதில் கொஞ்சம்கூட தாமதிக்கவில்லை.

## எதிர்க்கட்சிகள் காத்துக்கொண்டிருக்கவும் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கவும் முடியாது

—திபங்கர்—

மேற்கு வங்கத்தில் அதிகாரத்தைக் கைப்பற்ற பாரதிய ஜனதா கட்சி பல பத்தாண்டுகளாக காத்துக் கொண்டிருக்க வேண்டியிருந்தது. அந்தக் காத்திருப்பு இந்த மே மாதத்தில் முடிவுக்கு வந்தது. ஆக, சங்கிப் படையின் கருத்தியல் அரசியல் வார்ப்புருவுக்கேற்ப வங்கத்தைப் பொருத்துவதில் போர்க்கால அடிப்படையில் வேலை தொடங்கப்பட்டு விட்டது.

அதிகாரத்திற்கு வந்து இரண்டே மாதங்களில், சங்கிப் படை தனது அதிரடித் தாக்குதலை கட்டவிழ்த்து விட்டுள்ளது. அதன்மூலம், தன் மதவாத நிகழ்ச்சி நிரலின் முழுச் சீர்கேட்டையும் மக்களுக்கு அறிமுகப்படுத்துகிற தீவிரமான குறுகிய கால பயிற்சி வகுப்பை வங்கத்தில் நடத்திக் கொண்டிருக்கிறது. பாசிச பயங்கரவாதம், அரசு-தனியார் கூட்டணி, கலவரக் கும்பல்களுக்கு அரசு அதிகாரம் வழங்குவதும் அவற்றுடன் கூட்டு சேர்ந்து செயல்படுவது என மாநிலம் முழுவதும் இரட்டிப்பு நேரத்தை செலவு செய்து வருகிறது. அதேவேளை, தனது ஆட்சியின் கொள்கைத் திட்டத்தை கட்டவிழ்த்து விடுவதில் முனைப்பாக உள்ளது. அதோடு, புல்டோசர் மோதல் கொலைகளின் ஆட்சிக்கான சூழலையும் தயார் படுத்துகிறது.

கடந்த பத்தாண்டுகளுக்கு மேலாக, கும்பல் படுகொலை, புல்டோசர் ஆட்சி, (அரசாங்க சொற்களில், 'புல்டோசர் நீதி'), மோதல் கொலைகள் என மூடி மறைத்து குறிவைத்து ஒழித்துக்கட்டும் மூன்று குறிப்பிடத்தக்க அம்சங்களை இந்தியாவில் பாசிச ஆட்சி வெளிப்படுத்தியுள்ளது. இந்த மூன்று அம்சங்களும் புதிய ஆட்சி நடைமுறையால் ஏற்கனவே பகட்டாக பறைசாற்றப் பட்டு விட்டன. திரிணாமுல் காங்கிரஸ் தலைவர் அபிஷேக் பானர்ஜி மீது முட்டைகளை எரிந்த முதல் சம்பவம், புதிய போக்கை உருவாக்கியது. தற்போதைய புதிய அரசுடன் முழுமையாக கூட்டு சேர்ந்துவிட்ட மேற்கு வங்கத்தின் முதன்மை ஊடகங்கள், அந்த சம்பவத்தை திரிணாமுல் காங்கிரஸ் கால ஊழலுக்கு எதிரான பொதுமக்களின் கோப வெளிப்பாடு எனக்கூறின. குண்டர் கும்பல், சட்டத்தை வெளிப்படையாக தன் கைகளில் எடுத்துக் கொண்டதை ஊடகங்களோ, 'முட்டை வைத்தியம்' என்று பெயர் வைத்து அழைத்தனர்.

### மோதல் கொலைகளின் ஆட்சி

குஜராத்தில், மோதல் கொலைகளை தனது தந்திரம் என தத்தெடுத்து வைத்திருந்தார் அமித் ஷா. அதிகாரமிக்கவர்களாயினும் தண்டனையிலிருந்து தப்பிக்க முடியாது என்றிருந்த அக்காலத்தில், நீதித்துறை ஒரு வழக்கில் அவரை சிறைக்கும் அனுப்பி வைத்தது. உத்தரபிரதேசத்தில் முஸ்லீம்களுக்குச் சொந்தமான வீடுகள், மசூதிகள், கடைகள் அல்லது பிற நிறுவனங்களை இடித்துத் தள்ளுவதுமட்டுமின்றி, மோதல் கொலைகள் செய்வதையும் தனது ஆட்சி நிர்வாகத்தின் கொள்கையாக ஆக்கிக் கொண்டார் முதலமைச்சர் ஆதித்யநாத். மேற்கு வங்க பாஜக முதலமைச்சரோ அந்தக் கொள்கையை "காலையில் காவல்துறையிடம் ஒப்படையுங்கள், இரவில் கொன்று விடுங்கள்" என, திரைப்பட வசனம் போல, மாற்றிவிட்டார். இந்தக் கொள்கையின் முதல் நடவடிக்கை, கொல்கத்தா அருகில் உள்ள பருய்பூரின் 11 வயது சிறுமியைக் கொடூரமாக பாலியல் வன்கொடுமை செய்து கொன்றத்தில் வெளிப்பட்டது. அந்தக் கொலைக்கு சாட்சியாக இருந்த பிரபாஸ் மண்டல் போலி மோதலில் கொல்லப்பட்டார். அவர் உள்ளூர் பாஜக தலைவர் உட்பட சில நபர்களையும் அடையாளம் காட்டியிருந்தார்.

மோதல் கொலைகளை ஒரு கொள்கையாக கொள்வது என்பதற்கு சட்டத்தின் ஆட்சியை அப்பட்டமாக மறுப்பது என்று மட்டுமே பொருள். இது காவல்துறை கட்டுக்கடங்காத அதிகாரத்துடன் நடப்பதற்கு மட்டுமே உதவிசெய்யும்; அது எந்த பொருளிலும் குற்றங்களைத் தடுக்கும் எந்தவொரு விளைவையும் ஏற்படுத்தப் போவதில்லை. ஆதித்யநாத் ஆட்சியில் உத்தரப்பிரதேசத்தில் நாள் ஒன்றுக்கு சராசரியாக ஐந்து மோதல் கொலைகள் அரங்கேறுகின்றன. இருப்பினும், பெண்களுக்கு எதிரான குற்றங்களில் உ.பிதான் தொடர்ந்து முதலிடம் வகிக்கிறது. மோதல் கொலைகளின் ஆட்சி எப்படி குற்றவியல் நீதி அமைப்பை குறுக்கு வழியில் இட்டுச் செல்கிறது என அலகாபாத் உயர் நீதிமன்றம் சுட்டிக்காட்டியுள்ளது. மேலும், முதல் தகவல் அறிக்கையை கட்டாயமாக்கியும் ஒவ்வொரு மோதல் கொலை குறித்த விசாரணைக்கும்

ஆணையிட்டுள்ளது. அதேவேளையில், உபி காவல்துறையின் ஒருதலைப் பட்ச நடவடிக்கையையும் அம்பலமாக்கியுள்ளது.

**அளவிற்கதிகமான நகர்வுகள்**

இந்தத் தான்தோன்றித்தனமான அடக்குமுறை, ஆட்சி நிர்வாகத்தால் செயல்படுத்தப்பட்டுள்ள புதிய கொள்கைகளையும் சட்டங்களையும் இணைத்துப் பார்க்க வேண்டும். எவரொருவரையும் விசாரணையின்றி ஒரு முழு ஆண்டும் கூட தடுப்பு காவலில் வைக்கும் அதிகாரத்தை தற்போது இந்த அரசாங்கம் பெற்றுள்ளது. அத்தகைய தடுப்புக் காவலில் வைக்கப்பட்டவர்களுக்கு தங்களுக்காக சட்ட ஆலோசகர் வைத்துக் கொள்ளும் உரிமையும் கூட கிடையாது. கலப்பு மணங்கள் மற்றும் திருமணம் செய்து கொள்ளாமல் இணைந்து வாழ்வதைத் (குற்றம் என்று சொல்லாவிட்டாலும்) தடுக்கும் பொது சிவில் சட்ட மசோதா கூடுதலான ஆய்வுக்காக ஒன்பது உறுப்பினர் கொண்ட குழுவிற்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது. பிற பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான இட ஒதுக்கீடு 17%த்திலிருந்து 7%மாக அதிரடியாக குறைக்கப்பட்டுள்ளது. 2011 லிருந்து வழங்கப்பட்டுள்ள அனைத்து பட்டியல் சாதி, பட்டியல் பழங்குடி, பிற பிற்படுத்தப்பட்ட சாதிச் சான்றிதழ்கள் கட்டாய மறு சரிபார்த்தலுக்கு உட்படுத்தப்படுகின்றன. அரசால் இயக்கப்படும் ஐம்பத்தொரு தொழில் பயிற்சி நிலையங்கள் தனியார்மயாக்கப்பட உள்ளன. சந்தேகத்திற்குரிய வங்கதேச குடிமக்களை மீண்டும் வங்கதேசத்திற்கு திருப்பி அனுப்பும் முன்பு அவர்களை அடைத்துவைக்க பதினொரு தடுப்பு மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த 'திருப்பி அனுப்புதல்' நாடு கடத்துதல் என்று அழைக்கப்படுவதில்லை; இதுவொரு சட்டவிரோத வலுக்கட்டாய நடவடிக்கையாகும். இதன்மூலம் வங்கதேச பகுதிக்குள் எல்லை தாண்டி மக்கள் தள்ளப்படுகிறார்கள். ஸ்வீட்டி பீபி மற்றும் இரண்டு குழந்தைகள் உட்பட ஐந்து இந்தியக் குடிமக்கள் வங்கதேசத்திற்கு சட்டவிரோதமாக வெளியேற்றப்பட்டு ஓராண்டு நீண்ட சட்டப் போராட்டத்திற்குப் பிறகு திரும்பி வந்தனர். இது 'திருப்பி அனுப்பும் நடவடிக்கை' என்ற பெயரில் நடக்கும் கொடுமையையும் அநீதியையும் உணர வைக்கும் நிகழ்வாகும்.

கருத்தியல் ரீதியாக ஆக்கிரமிப்பு செய்யும் ஆர்எஸ்எஸ்-ஸின் நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்ப, வரலாறும் கலாச்சாரமும் புதிய பாஜக அரசாங்கத்தின் முக்கிய போர்க்களங்களாக ஏற்கனவே மாறிவிட்டுள்ளன. பெரும்பாலும் முஸ்லிம்கள் வாழும் கொல்கத்தாவின் ஒரு பகுதியில் உள்ள முக்கிய சாலைக்கு, புகழ் பெற்ற மருத்துவரும் கல்கத்தா பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தருமான ஹசன் சுஹ்ரவார்டியின் நினைவாக சுஹ்ரவார்டி நிழற்சாலை என அழைக்கப்பட்டது. நூறாண்டிற்கும் மேலாக இருந்த அந்த சாலையின் பெயர், விவேக் அக்னிஹோத்ரியின் படமான 'தி பெங்கால் ஃபைல்ஸ்' இல் வங்க இந்துக்களின் மீட்பராக காட்டப்பட்ட கோபால் முகர்ஜியின் பெயரில் 'கோபால் முகர்ஜி சாலை' என இப்போது மாற்றப்பட்டுள்ளது. கொல்கத்தா சாலைகளின் பெயர்களை மாற்றம் செய்ய, 'முகலாய', 'பதான்' பெயர்களை மாற்றுவதற்கு, சர்ச்சைக்குரிய கார்த்திக் மகராஜின் தலைமையில் ஒரு குழுவை முதலமைச்சர் அமைத்துள்ளார். கார்த்திக் மகராஜ், அல்லது பாரத் சேவாசிரம சங்கத்தைச் சேர்ந்த சுவாமி பிரதிப்தானந்தர் மீது பாலியல் வன்கொடுமைப் புகாரும் முஸ்லிம்களுக்கு எதிராக வன்முறையைத் தூண்டியதாக குற்றச்சாட்டும் உள்ள போதிலும் 2025 ஆம் ஆண்டில் அவருக்கு பத்மஸ்ரீ விருது வழங்கப்பட்டது.

**மரபின் விருப்பத்தேர்வு**

சியாமா பிரசாத் முகர்ஜி ஏற்கனவே மேற்கு வங்கத்தின் தந்தையாக அறிவிக்கப்பட்டுள்ளார். சுதந்திரத்திற்கு முந்தைய இந்தியாவின் ஒட்டுமொத்த பிரிவினையின் ஒரு பகுதியாக, பிரிக்கப்படாத வங்கம் இரண்டாகப் பிரிக்கப்பட்ட நாளைக் குறிக்கும் வகையில் ஜூன் 20 மேற்கு வங்க நாளாக அறிவிக்கப்பட்டுள்ளது. மேற்கு வங்கத்தின் வரலாற்றை மறுவரையறை செய்யும் இந்த மறைமுக நோக்கங்களைக் கொண்ட முயற்சிகளுக்கு மத்தியில், கொல்கத்தாவில் பள்ளி மதிய உணவுத் திட்டம் இஸ்கான் அமைப்பிடம் ஒப்படைக்கப்பட்டது. அப்போது மற்றொரு கருத்தியல் அறிக்கை வெளியிடப்பட்டது. சைவ உணவை உயர்த்திப்பிடிக்கும் பொருட்டு முட்டைகள் உணவுப் பட்டியலில் இருந்து நீக்கப்படும் என்று இஸ்கான் அறிவித்தது. மதிய உணவுப் பட்டியல் மற்றும் குழந்தைகளின் ஊட்டச்சத்தை அப்பட்டமாகப் பலவீனப்படுத்துவது என்பதைத் தாண்டி, மேற்கு வங்கத்தில் இஸ்கானின் வளர்ச்சியை மாநிலத்தின் பரந்த பண்பாட்டுச் சூழலில் காண வேண்டும்.

பக்தி இயக்கத்தின் மாபெரும் சின்னமான சைதன்ய மகாபிரபுவின் நிலமான மேற்கு வங்கம், கௌடிய வைஷ்ணவம் என அழைக்கப்படும் வலுவான வைஷ்ணவ மரபை எப்போதும் கொண்டுள்ளது. இந்த 16ஆம் நூற்றாண்டு மரபு, 19ஆம் நூற்றாண்டு மற்றும் 20ஆம் நூற்றாண்டின் முற்பகுதிகளில் ஹரிசந்த் தாக்கூர் (1812-1878), அவரது மகன் குருசந்த் தாக்கூர் (1847-1937) ஆகியோரால் வலுவான சாதி எதிர்ப்பு திசைவழியில் கொண்டு செல்லப்பட்டு, மடுவா மதமாக உறுதிப்படுத்தப்பட்டது. இது ஜோதிபா, சாவித்ரிபாய் பூலே ஆகியோர் வெகுமக்கள் கல்வியை, குறிப்பாக பெண்கள், ஒடுக்கப்பட்ட சாதிகளுக்கான கல்வியை, அதிகாரமளித்தலுக்கும் தீவிர சமூக விழிப்புணர்வுக்கும் ஆயுதமாக

மேம்படுத்திக் கொண்டிருந்த காலமாகும். சைதன்யரின் கௌடிய வைஷ்ணவத்திலிருந்து ஹரிசந்த்-குருசந்த் மடுவா மதப் பள்ளி வரையிலான முழு மரபையும் இஸ்கான் கைப்பற்ற முயற்சி மேற்கொள்ளப்படுகிறது. மூர்க்கத்தனமான இந்துத்துவ திட்டத்தில் ஆர்எஸ்எஸ்-ஸின் சக்திவாய்ந்த உலகளாவிய கருத்தியல் கூட்டாளியாக இஸ்கான் இயங்குகிறது.

பாஜக தனது முழு நிகழ்ச்சிநிரலையும் ஒரு கணம் கூட வீணடிக்காமல் கட்டவிழ்த்துவிட விரும்புகிறது. இரும்பு சூடாக இருக்கும்போதே, முடிந்தவரை பலமாக அடித்துவிடப் பார்க்கிறது. நரேந்திர மோடி இப்போதும் நேருவையும் காங்கிரசையுமே மக்கள் மத்தியில் சொல்லிக் கொண்டே இருப்பது போலவே, மேற்கு வங்கத்தில் மம்தா பானர்ஜியையும் திரிணாமுல் காங்கிரசையும் மக்கள் கவனத்தை திசைதிருப்பும் திரையாக பயன்படுத்த பாஜக விரும்புகிறது. அந்த திரைக்குப் பின்னால் இடையூறின்றி தனது திட்டத்தை செயல்படுத்த முடியும் என நினைக்கிறது. திரிணாமுல் காங்கிரஸ் ஏற்கனவே மூன்று பிரிவாக பிளவுபடும் நிலைக்குள்ளாக்கப்பட்டுவிட்டது. மம்தா பானர்ஜியிடமிருந்து அவரது கட்சியைப் பறிக்கும் பொருட்டு, கிளர்ச்சி சட்டமன்ற உறுப்பினர்கள் தான் ‘உண்மையான திரிணாமுல் காங்கிரஸ்’ என்று முன்னிறுத்தப்படுகிறார்கள். திரிணாமுல் காங்கிரஸ்-ஸின் பெரும்பான்மை மக்களவை உறுப்பினர்கள் ‘தேசியவாத நேசனலிஸ்ட் சிட்டிசன்ஸ் பார்ட்டி ஆஃப் இந்தியா’ என்று அழைக்கப்படும் தங்கும் மையத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். மூன்று மாநிலங்களவை உறுப்பினர்கள் நேரடியாக பாஜகவிற்கு மாற்றம் செய்யப்பட்டு திருமுழுக்கு செய்யப்பட்டுள்ளனர். இதற்கிடையில், களத்தில் எல்லா தரப்பிலிருந்தும் வரும் எதிர்ப்பையும் ஒருங்கிணைக்கப்பட்ட குண்டர் கும்பல் வன்முறை, அரசு தலையீடு மூலம் மௌனமாக்க முயற்சி மேற்கொள்ளப்படுகிறது. பாஜகவை ஒரு தற்காலிக நிகழ்வாக, அதன் நிகழ்ச்சி நிரலை ஆட்சி நிர்வாகம் என்ற பெயரில் நடக்கும் சில மாய வித்தையாக மேற்கு வங்கத்தின் மதச்சார்பற்ற முற்போக்கு கருத்து கொண்டவர்கள், நினைத்தால் அது தவறாகவே முடியும். இந்தியாவின் பாசிச மறுவடிவமைப்பு திட்டத்திற்கு மேற்கு வங்கத்தை இன்னொரு பாதுகாப்பான பரிசோதனைக் கூடமாக மாற்றுவதில் சங்கிப் படை தீவிரமாக உள்ளது. பாஜக ஒரு கணம் கூட வீணாக்கத் தயாரா இல்லாதபோது, இடதுசாரிகளும் தங்கள் பெயருக்குத் தகுதியான எந்தவொரு எதிர்க்கட்சியும் காத்துக் கொண்டிருக்கலாமா?

**(தி வயர் இணைய இதழில் ஜூலை 14, 2026ல் வெளிவந்த கட்டுரை, தமிழாக்கம்: செந்தில்)**

# ஆகஸ்ட் 9 ல் “மோடி அரசே பதவி விலகு” என முழங்குவோம்

## ஏஅய்சிசிடியு மாநில நிர்வாகிகள் கூட்டத்தில் முடிவு

டாஸ்மாக் தொழிலாளர்களின் எழுச்சி மிக்கப் போராட்டம், சென்னை எம்ஆர்எஃப் ஆலைத் தொழிலாளர் சங்கத் தேர்தலில் மாநிலத் தலைவர் தோழர் பாரதி தலைமையிலான குழு அனைத்துப் பொறுப்புகளிலும் வெற்றி என்ற பின்னணியில் ஏஅய்சிசிடியு மாநில நிர்வாகிகள் கூட்டம் கோவையில் 12.07.2026 அன்று மாநிலத் தலைவர் தோழர் பாரதி தலைமையில் நடந்தது. ஏஅய்சிசிடியு அகில இந்தியத் தலைவர் தோழர் வீ.சங்கர் மற்றும் ஆலோசகர் தோழர் எஸ்.குமாரசாமி மற்றும் தமிழ்நாட்டிலுள்ள தேசியக் குழு உறுப்பினர்கள் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

தமிழ்நாட்டின் தொழிலாளர் வர்க்கச் சேர்க்கை, தமிழ்நாட்டின் பல்வேறு அரங்கங்களிலும் மாவட்டங்களிலும் ஏஅய்சிசிடியு தலைமையில் நடக்கும் வேலைகள், நடக்க வேண்டிய வேலைகள், ஏஅய்சிசிடியு நடத்திக் கொண்டிருக்கும் சில வழக்குகள், நான்கு தொழிலாளர் சட்டத் தொகுப்புகள் தொடர்பான கோபால் கவுடா கமிட்டி பரிந்துரைகள் ஆகியவை பற்றி தாள் முன்வைக்கப்பட்டது.ஏஜசிசிடியு தேசிய செயற்குழு கூட்டத்தில் தோழர் எஸ் கே உரை இடம்பெற்ற ஒருமைப்பாடு ஜூலை இதழும் நிர்வாகிகளுக்கு வழங்கப்பட்டது.

தமிழ்நாட்டின் தொழிலாளர் வர்க்கம் பற்றிய ஒரு பரந்த பார்வை தரும் தாள் மீது அடுத்த கட்ட வேலைகள் பற்றிய முன்வைப்புகள் அடிப்படையில் வெவ்வேறு அரங்க வேலைகளை முன்னெடுக்க, கூட்டத்தில் கலந்துகொண்ட தோழர்கள் கருத்துகள் முன்வைத்தனர். விவாதங்களைத் தொடர்ந்து தோழர்கள் எஸ். குமாரசாமி மற்றும் வீ.சங்கர் உரையாற்றினர்.

கூட்டத்தில், ஆகஸ்ட் 9 அன்று “மோடி அரசே பதவி விலகு” என்ற முழக்கத்துடன் மாநிலம் முழுவதும் எதிர்ப்பு நிகழ்ச்சிகள் பெருந்திரள் தொழிலாளர்களுடன் நடத்தப்பட வேண்டும்.

‘வரலாற்றை மற, வலியை மறவோம்’ என்ற முழக்கத்துடன் ஆகஸ்ட் 13 அன்று சென்னையில் நடக்கவுள்ள தூய்மைப் பணியாளர் அணிதிரட்டலை வெற்றிகரமாக்க வேண்டும்.

‘பிரிக்கால் இருவர் விடுதலை’ தொடர்பாக சட்ட அமைச்சர் சந்திப்பு நடத்தப்பட வேண்டும்.

நான்கு தொழிலாளர் சட்டத் தொகுப்புகள்,




எல்ஏ பில் 47/2008 உள்ளிட்ட, தமிழ்நாட்டு தொழிலாளர் கோரிக்கைகளை வலியுறுத்தி மாநில அளவில் பரப்புரை மற்றும் அணிதிரட்டல் மேற்கொள்ளப்பட வேண்டும்.

இடதுசாரி வெகுமக்கள் அமைப்பு ஒருங்கிணைப்பு செப்டம்பரில் திட்டமிடும் நிகழ்ச்சியில் கவுரவமான எண்ணிக்கையில் கலந்துகொள்ள வேண்டும்.

தோழர் குமாரசாமி தனது உரையில்,

தமிழ்நாட்டின் தொழில் நிலைமை, தொழிலாளர் நிலைமை பற்றிய சித்திரம் கொடுக்கப்பட்டுள்ளது. புலம்பெயர்ந்த தொழிலாளர்களின் துன்பங்களை புதுமைப்பித்தன் "துன்பக் கேணி" சிறுகதையிலும் மகாகவி பாரதியார் "கரும்புத் தோட்டத்திலே" கவிதையிலும் பதிவு செய்திருக்கிறார்கள்.

திருவள்ளூரில் நடந்த அம்மோனியா விஷவாயு கசிவு விபத்தில் ஒடிசா மாநிலத்தில் இருந்து வந்து வேலை செய்த பழங்குடியின பெண்கள், சிறுமிகள் கொல்லப்பட்டுள்ளனர். இது ஒரு "படுகொலை". பழங்குடி சமூகத்தைச் சேர்ந்த முர்மு அவர்கள் இந்திய நாட்டின் ஜனாதிபதியாக இருக்கும் போதுதான் இந்த நிகழ்வு நடைபெறுகிறது. தமிழக மக்கள் தொகை 7 கோடிப் பேரில் 4 கோடி பேர் தொழிலாளர்களாக இருப்பார்கள். கிராமப்புரத் தொழிலாளர்களின் கூலி மட்டம் மிகவும் சரிந்து உள்ளது. நம் சங்க உறுப்பினர்களை வாயு, திரவம், திடம் என வகையினங்களாக பிரிக்க முடியும்.

4 கோடி தொழிலாளர்களில் 10 லட்சம் -15 லட்சம் பேரை வருடத்தில் இரண்டு முறையாவது சந்திக்க முடியும் என்று சொன்னால் அதைத்தான் தொழிற்சங்க இயக்கத்தின் வீச்சாக கருத முடியும்.

தொழிற்சங்க இயக்கம் குறுகிய அடித்தளத்தில் இயங்குகிறது பாட்டாளி வர்க்க இயக்கமோ பரந்து விரிந்த ஒன்றாகும். நமது வேலைகளில் குறுகிய தன்மை நிலவுகிறது.

தோழர் லெனின் எழுதிய "என்ன செய்ய வேண்டும்?" நூலை ஒரு நாவலை படிப்பது போல படிக்க வேண்டும். தோழர் லெனின்-கத்துக்குட்டித்தனம் பற்றியும் தொழில் நேர்த்தி பற்றியும் பேசுகிறார். மக்களுக்கு திறம்பட சேவை செய்ய வேண்டும் என்று சொன்னால் தொழில் நேர்த்தி வேண்டும் என்று கூறினார்.

இறுதியாக உரையாற்றிய தோழர் சங்கர், 'ஒன்றிய அரசு, ஒட்டுமொத்தமாக உழைக்கும் மக்களுக்கு எதிராகச் செயல்பட்டு வருகிறது. குறைந்த பட்ச கூலி, பணி நிலைமைகள் அனைத்தையும் அதானி அம்பானி போன்ற முதலாளிகளுக்கு ஏற்ப மாற்றி வருகிறது. அதனால்தான், வட மாநிலங்களில் தொழிலாளர்கள் அவர்களாகவே போராட்டங்களில் ஈடுபட்டு வருகிறார்கள். தமிழ்நாட்டில் திமுக அரசின் கடைசி காலத்தில் கிளர்ந்தெழுந்த தூய்மைப் பணியாளர்கள் போராட்டமும் பல்வேறு உழைக்கும் மக்கள் போராட்டங்கள்தான் அந்த ஆட்சிக்கு முடிவு கட்டியது. தவெக அரசு தன்னுடைய தேர்தல் வாக்குறுதிகளை மறந்து விட்டு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. அதன் காரணமாக, தூய்மைப் பணியாளர்கள், டாஸ்மாக் ஊழியர்கள் என போராட்டக் களத்தில் குதித்துக் கொண்டிருக்கிறார்கள். ஏஅய்சிசிடியு இந்த தருணத்தைக் கைப்பற்ற வேண்டும். எண்ணிக்கை பலத்தை அதிகரிக்க வேண்டும். போராட்டக் களத்தைக் கட்டமைக்க வேண்டும்' என்று கூறினார்.



## தனியார் மயத்திற்கு எதிராக தூத்துக்குடி மாநகராட்சி தூய்மைப் பணியாளர்கள், ஓட்டுநர்கள்

# போராட்டம்






தூத்துக்குடி மாநகராட்சியில் தூய்மைப் பணியாளர்களுக்கும், வாகன ஓட்டுநர்களுக்கும் அரசாணை 62/2017ன் படி சம்பளம் வழங்க கோரியும் உடனடியாக மாவட்ட ஆட்சியர் ஆணைப் படி சம்பளம் வழங்கவும், சம்பளத்தில் உள்ள முறைகேடுகளைக் களையக் கோரியும் சட்ட விரோதமாக பணி நீக்கம் செய்யப்பட்ட தோழர்.பொன்ராஜ் அவர்களுக்கு 30.01.2026 அன்று நடந்த பேச்சுவார்த்தை முடிவின் படி வேலை வழங்கக் கோரியும் வேலை நிறுத்தம் மற்றும் மனு கொடுக்கும் போராட்டம் ஏஐசிசிடியு மாநிலத் துணைத் தலைவர் தோழர் த.சகாயம் தலைமையில் 13.07.2026 அன்று நடைபெற்றது. ஏஐசிசிடியு மாநில சிறப்புத் தலைவர் தோழர் த.சங்கரப் பாண்டியன், தோழர்கள் சிவராமன், பாலமுருகப் பெருமாள், முருகன். லட்சுமி, வெங்கடேஸ்வரி, சக்தி, சுகுமார் உள்பட 100க்கும் மேற்பட்ட தோழர்கள் கலந்து கொண்டனர்.

இரவு 9 மணிக்கு மேல் மாநகராட்சி மேயர், தோழர் பொன்ராஜுக்கு 2 நாளில் மீண்டும் வேலை வழங்க ஏற்பாடு செய்வதாகச் சொன்னார். அதேவேளை, மாவட்ட ஆட்சியர் ஆணைப்படி சம்பளம் வாங்கித் தர உறுதி சொல்லாததால் தோழர்கள் போராட்டத்திலிருந்து பின்வாங்க மறுத்தனர். மாநகராட்சி வளாகத்தை விட்டு வெளியேற மறுத்தனர். இரவு 11 மணிக்கு மேல் 28 பெண்கள் 14 ஆண்கள் கைது செய்யப்பட்டு சிவன் கோவில் அருகே உள்ள மாநகராட்சி திருமண மண்டபத்தில் வைக்கப்பட்டனர். திடீரென இரவு 1.20க்கு அங்கு வந்த மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு. மதன் தோழர்களை அங்கே தங்கக் கூடாதென்றும் உடனடியாகக் காலி செய்ய வேண்டுமென்றும் கெடுபிடி செய்ய ஆரம்பித்தார். தோழர்கள் குறிப்பாக பெண் தோழர்கள் அதை ஏற்க மறுத்து பழைய பேருந்து நிலையத்திற்கு நடந்து சென்று அங்கே மீதி இரவைக் கழித்தனர். மீண்டும் அடுத்த நாள் போராட்டத்தைத் தொடர்ந்தனர். இந்த நிலையில், தமிழ்நாடு மீன் வளத் துறை அமைச்சர் ஸ்ரீநாத் தொலைபேசியில் தொடர்பு கொண்டு தோழர். பொன்ராஜுக்கு மீண்டும் வேலை வழங்க உறுதி அளித்தார். பின்னர் அவர் ஏற்பாட்டில் மாநகராட்சி ஆணையருடன் மீன் வளத் துறை அமைச்சரின் உதவியாளர் மற்றும் காவல் துறை அதிகாரிகள் முன்னிலையில் அன்று காலை 11 மணிக்கு பேச்சுவார்த்தை நடைபெற்றது. தொழிலாளர் தரப்பில், 1)ஊதிய முறைகேடுகளை ஆய்வு செய்து களைவது 2) மாவட்ட ஆட்சியரின் ஆணைப்படி உடனடியாக சம்பளம் வழங்குவது 3) தொழிலாளரின் வேலை நடைப் பிரச்சனைகள் முன்வைக்கப்பட்டன. ஆனால் மாவட்ட ஆட்சியர் ஆணைப்படி சம்பளம் தர மாட்டோம். அவர்லேண்ட் ஒப்பந்த நிறுவனத்துடனான சரத்து அப்படி சொல்லவில்லை என்றார் ஆணையர். மாவட்ட ஆட்சியர் ஆணைப்படிதான் சம்பளம் கொடுக்கப்பட வேண்டும். ஒப்பந்தத்தை விட சட்டமே மேலானது. மறுப்பது அரசியலமைப்புச் சட்டத்திற்கு எதிரானது என்று தொழிற்சங்கத் தரப்பில் வாதிட்டோம். பின்னர் மாநகராட்சி ஆணையர் ஒரு வாரத்தில் சம்பள முறைகேடுகளை ஆய்வு செய்து பதிலளிப்பதாக வாக்களித்தார். அமைச்சரை சந்தித்துப் பேசவும் தீர்வு எட்டவில்லை என்றால் போராட்டத்தைத் தொடரவும் முடிவு செய்யப்பட்டது.

**-முருகன்**

# புரட்சிகர இளைஞர் கழகம் (RYA) அகில இந்திய மாணவர் கழகம் (AISA) மாநில ஊழியர் கூட்டம்




புரட்சிகர இளைஞர் கழகம் மற்றும் அகில இந்திய மாணவர் கழகத்தின் மாநில ஊழியர் கூட்டம் 7.7.2026 அன்று காஞ்சிபுரம் மாவட்டம் ஸ்ரீபெரும்புதூர் மக்கள் மாமன்றத்தில் நடைபெற்றது

கூட்டம் சென்னை மாநகர கமிட்டி செயலாளர் தோழர் சக்திவேல் அவர்களுக்கு அஞ்சலி செலுத்தி துவங்கியது. கூட்டத்தில் ஆர்ஒய்ஏ தேசியச் செயலாளர் தோழர் நீரஜ்குமார் கலந்து கொண்டு உரையாற்றினார்.

சிபிஐ(எம்எல்) கட்சியின் அரசியல் தலைமை குழு உறுப்பினர்கள் தோழர் வீ.சங்கர், தோழர் எஸ்.குமாரசாமி, மாநிலச் செயலாளர் தோழர் பழ.ஆசைத்தம்பி ஆகியோர் கலந்து கொண்டு கருத்துரை வழங்கினர்.

கூட்டத்தில், ஜூலை 15 முதல் ஆகஸ்ட் 9 வரை தீவிர உறுப்பினர் சேர்ப்பு இயக்கம் நடத்துவது, ஆகஸ்ட் 9 முதல் செப்டம்பர் 1 வரை சிபிஐ எம் எல் கட்சியின் சார்பாக மாவட்டங்களில் நடைபெறும் போராட்டங்களில் ஆர்ஒய்ஏ தோழர்கள் தனித்த அடையாளத்துடன் கலந்து கொள்வது,

செப்டம்பர் 1 முதல்15 வரை புரட்சிகர இளைஞர் கழகத்தின் மாவட்ட மாநாடுகள் நடத்துவது,

செப்டம்பர் 15 முதல் 28 வரை தவெக அரசின் தேர்தல் வாக்குறுதிகளான 5 ஆண்டுகள் அரசுத் துறைகளில் ஒப்பந்த முறையில் பணியாற்றிய அனைவரையும் பணி நிரந்தரப்படுத்துவோம் வேலை வாய்ப்பற்ற இளைஞர்களுக்கு மாதம் ரூ.4500 வழங்குவோம் மகளிர் உரிமைத் தொகை 2500 வழங்குவோம் எனக் கூறியதை வலியுறுத்தியும்

இன்னும் சில இளைஞர், மாணவர் கோரிக்கைகளை மையமாக வைத்து பொதுமக்கள் மத்தியில் பரப்புரை மேற்கொள்வது,

தொடர்ந்து மாவட்ட ஆட்சியர் அலுவலகங்கள் முன்பு கோரிக்கைகளை வலியுறுத்திய ஆர்ப்பாட்டம் நடத்துவது

அக்டோபர் 1 முதல் 15வரை மாவட்ட பொதுப் பேரவைகள் நடத்துவது

அக்டோபர் 15 முதல் புரட்சிகர இளைஞர் கழக மாநில மாநாட்டிற்கான பிரச்சாரம் தொடர்ந்து,

நவம்பர் 15 புரட்சிகரஇளைஞர் கழக மாநில மாநாடு நடத்துவது, டிசம்பரில் நடைபெறவிருக்கும் அகில இந்திய மாநாட்டை வெற்றி பெறச் செய்வது என முடிவு செய்யப்பட்டது.

கூட்டத்தின் முடிவில், நீட் முறைகேடுகளுக்குப் பொறுப்பேற்று ஒன்றிய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் பதவி விலகக்கோரி திருபெரும்புதூர் பேருந்து நிலையம் அருகில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

**– மா.சுந்தர்ராஜ்**



# தோழர் சக்திவேலுக்கு செவ்வணக்கம்!



சிபிஐ (எம்எல்) கட்சியின் சென்னை மாநகர கமிட்டி உறுப்பினரும் சட்டக் கல்லூரி மாணவரும் ஜனநாயக சட்ட மாணவர் சங்கத் தலைவரும் உழைப்போர் உரிமை இயக்கத் தலைவர்களின் ஒருவருமான தோழர் சக்திவேல் கடந்த 06.07.2026 அன்று நடந்த விபத்தில் அகால மரணமடைந்தார். 05.07.2026 அன்று தூய்மைப் பணியாளர் மாநாட்டில் கலந்து கொண்டுவிட்டு, மறுநாள் கல்லூரிக்குச் சென்றவர் விபத்தில் சிக்கி மரணமுற்றார். மார்க்சிய–அம்பேத்கரிய– பெரியாரிய வழியைத் தேர்வு செய்து கொண்டு உழைக்கும் வர்க்கத்திற்காக தன்னுடைய வாழ்க்கையைத் தகவமைத்துக் கொண்டவர் தோழர் சக்திவேல். மதவெறிப் பாசிசமும் சாதியாதிக்கமும் தலைவிரித்து ஆடிக் கொண்டிருக்கும் இன்றைய காலகட்டத்தில் சமூகநீதிக்காக மாணவர் பருவத்திலேயே போராட்டக் களத்தில் நின்றவர் தோழர் சக்திவேல். அவருடைய மரணம் பேரிழப்பாகும். தோழர் சக்திவேலின் இறுதி நிகழ்ச்சியில் இகக(மாலெ) மாநிலச் செயலாளர் தோழர் பழ. ஆசைத்தம்பி, ஏஐசிசிடியு மாநிலத் தலைவர் கு.பாரதி உள்ளிட்ட கட்சித் தோழர்கள், தூய்மைப் பணியாளர் சங்கத் தோழர்கள் பலர் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர். தோழர் சக்திவேலுக்கு செவ்வணக்கம்!

# கிராம மக்கள் வழிபாட்டுரிமை மீது தாக்குதல், கைது

# வன்மையான கண்டனம்!

சேலம் மாவட்டம் பனமரத்துப்பட்டி ஒன்றியம் அத்திப்பட்டி, சூரியூர் கிராமங்களின் பழங்குடி, பட்டியல் இன மற்றும் ஏழை விவசாயிகள் சுமார் 500 பேர், 22 ஆண்டுகளுக்கு முன்னர், தாங்கள் இழந்த சுமார் 1300 ஏக்கர் வேளாண் நிலங்களின் மீதான உரிமை கோரி தொடர்ந்து போராடி வருகின்றனர். ஆடி 1 க்கு, தங்கள் முன்னோருக்கு அவர்கள் வாழ்ந்த பூமியில், கோவில்களில் ஆடுகள், கோழிகள் பலியிட்டு படையல் இட்டு வழிபடுவது காலம் காலமாக இருந்துவரும் மரபாகும். கடந்த 2025 ஆடி 1 அன்றும் காலையில் இருந்தே, தங்கள் முன்னோர்கள் வாழ்ந்த, நூற்றாண்டு காலம் பயிரிட்ட வேளாண் நிலங்களுக்குச் சென்று முன்னோரை வழிபட்டனர். அதேபோல் இந்த ஆண்டும் 17.7.26 , ஆடி 1 அன்று ஆடுகள், கோழிகள் பலியிட்டு படையல் இட்டு வழிபட்டனர். அப்போது அங்கு வந்த நூற்றுக்கணக்கான காவல்துறையினர், மக்களை பலவந்தமாக தடுத்தும், கைது செய்தும், ஆட்டுக் கறி, பூஜை பொருட்களை கைப்பற்றியும், சுமார் 100 ஏழை விவசாயிகளை பனமரத்துப்பட்டி சமூக கூடத்தில் சிறைப்படுத்தி வைத்தனர்.

ஆடி 1 ல், முன்னோரை வழிபட்டதற்காக, அத்திப்பட்டி, சூரியூர் கிராமங்களின் பழங்குடி பட்டியலின மக்கள் மற்றும் ஏழை விவசாயிகள் மீது போலீசார் தாக்குதல் தொடுத்து கைது செய்திருப்பதை இகக(மாலெ) வன்மையாக கண்டிக்கிறது


தமிழ்நாடு அரசே, கிராம மக்கள் வழிபாட்டு உரிமையை தடை செய்யாதே!

22 ஆண்டுகளாக நீடிக்கிற பாரம்பரிய நில உரிமை மீதான பிரச்சினைக்கு முடிவுகட்ட, கடந்த திமுக ஆட்சியில், சேலம் மாவட்ட நிர்வாகம் அளித்த வாக்குறுதியின்படி ஆய்வுக் குழுவை அமைத்திட உடனே நடவடிக்கை எடுத்திடுக!





## ‘அஞ்ஞாடி’ பூமணிக்கு அஞ்சலி!



தனித்துவமான படைப்பு ஆளுமையுடன் தமிழ்ப் படைப்புலகில் தனித்து ஒளி பரப்பிய பூமணியின் மறைவு இலக்கிய உலகிற்கு பேரிழப்பாகும். 1961 ல் கவிதையில் கைபதித்து, சிறுகதை, புதினம், திரைப்பட இயக்கம் என பன்முக படைப்பாற்றல் கொண்டவர் பூமணி. ஒடுக்கப்பட்ட எளிய சமூக பின்புலத்திலிருந்து வந்த கரிசல் காட்டு பூமணி, (மாணிக்கவாசகம்) தமிழ்ப் படைப்புலகத்தில் உச்சத்தை தொட்டது எவருக்கும் எளிதாக கைவரக் கூடியதல்ல. சாகித்திய அகாடமி விருது பெற்ற அவரது அஞ்ஞாடி புதினத்துக்காக 150 கிராமங்களில் நேரடி ஆய்வு செய்து ஏழு ஆண்டுகள் உழைத்து உருவாக்கியது படைப்புலகில் மிகவும் அசாத்தியமானது.

வாழும் சமூகத்தின் வாழ்க்கைப்பாடுகளை எந்த இட்டுக்கட்டலும் இல்லாமல் படம்பிடித்துக் காட்டியது அவரது கரும்வேலம்பூக்கள். வாழ்ந்து முடித்த சமூகத்தை பின்னோக்கிச் சென்று நுணுகிப்பார்த்து நம்மிடையே வாழும் மனிதர்களாக கண்முன் நிறுத்துகிறது அஞ்ஞாடி.

ஆகச்சிறந்த படைப்பாளியான பூமணி, தமிழ் இலக்கியத்தில் மறுமலர்ச்சியைக் கொண்டு வந்த வானம்பாடி இயக்கத்துடன் நேரடியாக இயங்கவில்லை என்றாலும் மக்கள் கவிஞர் இன்குலாப், சூரிய தீபன் (பா.செயப்பிரகாசம்) போன்றவர்களுடன் நெருக்கமாக ஊடாடி வந்தவர். நக்சல்பாரி தெறிப்புகளை அவரது படைப்புகளில் காணமுடியும். “தலித் இலக்கியம்” போன்ற வகைப்பாடுகளை மறுத்த பூமணி, எளியமக்களின் வாழ்வனுபவங்களைப் பேசுவதே இலக்கியம் என்ற ஆழ்ந்த நம்பிக்கை கொண்டிருந்தார். மாநில, தேசிய விருதுகள் பல பெற்றிருந்தாலும் “விருதுகளுக்காக எழுதுவதில்லை; விருதுகள் நமது படைப்புகளுக்கு ஒரு அங்கீகாரம்” என்ற அவரது கருத்து ‘விருதுகளின் அரசியலை’ போர்த்திக் கொள்ள விரும்பாத பார்வையைக் காட்டுகிறது. எந்த அடையாளத்திற்குள்ளும் அடங்கிப்போகாத பூமணி, “மானுட” அடையாளத்தை மட்டுமே இறுதிவரை உயர்த்திப் பிடித்தார். சமூகம் திணித்த அடையாளத்தை மூடிமறைத்துக் கொள்ளாத பூமணி அந்த சமூகத்தின் மீதே எரிஅமிலத்தை வீசியவர். நாம் வாழும் சமூகத்தை ஆழ்ந்து படிக்க விரும்புபவர்களுக்கு பூமணியின் படைப்புகள் ஒரு கைவிளக்கு. படைப்புலகத்தில் ஈடுசெய்ய முடியாத ஒரு இடத்தை விட்டுச் சென்றிருக்கும் பூமணிக்கு மாலெ தீப்பொறி தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது.

## தோழர் ஜி.பி. (கோ.பழனி) அவர்களுக்கு செவ்வணக்கம்!



இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்–லெனினிஸ்ட்) புதுச்சேரி மாநில மேனாள் செயலாளரும் ஏஐசிசிடியு–வின் மாநிலத் துணைத் தலைவருமான தோழர் ஜி.பி. (கோ.பழனி), 15–07–2026 அன்று பிற்பகல் 4:00 மணியளவில் மாரடைப்பால் காலமானார்.

தோழர் ஜி.பி. தனது கட்சி வாழ்வு முழுவதும் மிகுந்த உற்சாகமும் அர்ப்பணிப்பும் கட்டுப்பாடும் கொண்ட ஒரு சிறந்த கட்சி ஊழியராகத் திகழ்ந்தார்.

கட்சிக் கட்டுப்பாட்டைக் கடைப்பிடிப்பதில் மிகவும் கண்டிப்பானவர். அதேசமயம் சக தோழர்களிடம் மிகுந்த அன்புடன் பழகக்கூடியவராகவே இருந்தார். மக்கள் நலனுக்காகத் தன்னை முழுமையாக அர்ப்பணித்துக்கொண்ட அவர், பல மக்கள் போராட்டங்களுக்குத் தலைமை தாங்கியுள்ளார். நம் அனைவருக்கும் ஓர் உத்வேகமளிக்கும் தோழராகவே இயங்கினார்.

பஞ்சாலைத் தொழிலாளியாக, தொழிற்சங்க அரங்கில் பல போராட்டங்களை முன்னின்று நடத்தியவர், அங்கு தொழிலாளர் வர்க்க நலன் கைவிடப்படுவதைக் கண்டு புரட்சிகர கம்யூனிஸ்ட் கட்சியான மார்க்சிஸ்ட்– லெனினிஸ்ட் கட்சியில் இணைந்து கட்சியின் புதுச்சேரி மாநிலச் செயலாளர்வரை உயர்ந்தார். புதுச்சேரியின் இடதுசாரி அரசியல் வட்டாரத்திலும் நன்மதிப்பை பெற்றவர்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட் – லெனினிஸ்ட்) தமிழ்நாடு மாநிலக் கமிட்டி தோழர் ஜிபி மறைவுக்கு செங்கொடி தாழ்த்தி அஞ்சலி செலுத்துகிறது.

அவரது மறைவால் துயருறும் அவரது குடும்பத்தினர், நண்பர்கள், புதுச்சேரியில் உள்ள கட்சித் தோழர்கள் அனைவருக்கும் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது.

**MALAE THEEPORI. Registered with Registrar of NewsPaper for India TN/TAM/2002/12013**
**Posted at Egmore RMS/1 Published on 1st and 16th of every month R.DIS: 2804/17**

## மோடி அரசே! அமைச்சர் தர்மேந்திர பிரதானை பதவியை விட்டு நீக்கு!




## அனைத்திந்திய விவசாய கிராமப்புற தொழிலாளர் சங்கம் உறுப்பினர் சேர்ப்பு இயக்கம்











Owned and **Published** by **S.Balasundaram** from 1/10, 11th street, Karunanidhi Nagar, Ayanavaram, Chennai - 600023
Printed by **Chennai Offset Printers,** 19/1,21/2, KitabathKhan Bahadur street, Ellis Rd, **Chennai** - 600002. **Editor G.Ramesh**